# ஆதியாகமம்.

படைப்பின் காலத்திலிருந்து யோசேப்பின் மரணம் வரையுள்ள உலக சரித்திரத்தை வெளிப்படுத்து கின்றது. ஆதியாகமத்தில் இரண்டு முக்கிய பகுதிகள் உள்ளன, அவைகள் இரண்டும் எல்லாவற்றிற்கும் ஆரம்பமாக உள்ளன என்று வேதாகமம் கூறுகின்றது. இதில் படைப்புக்கள் பற்றியும் மனித ஆரம்பம் பற்றி யும் பதியப்பட்டுள்ளது. (1–11).இதில் இஸ்ரவேலர் களுடன் ஏற்படுத்திய விசேட தொடர்புகள் பற்றி பதியப்பட்டுள்ளது. (12–50) அத்துடன் மனித வர்க்கத்தின் மீது கொண்டுள்ள நோக்கத்தையும் கூறுகின்றது

## கால அட்டவணை

| சம்பவம் | காலம் |
|---|---|
| படைப்பு | தெரியாது |
| வெள்ளம் | தெரியாது. |
| ஆபிரகாம் அழைக்கப்படல் | 2090.கி.மு. |
| யாக்போபின் பிறப்பு | 2006.கி.மு. |
| யோசேப்பு எகிப்திற்குச் சென்றது | 1898.கி.மு. |
| யாக்கோபு அவரதுகுடும்பம் எகிப்திற்கு செல்லுதல் | 1876.கி.மு. |
| யோசேப்பின் மரணம். | 1805கி.மு. |

**பின்னணி.**

படைப்பின் காலத்திலிருந்து யோசேப்பின் மரணம்வரையுள்ள உலக சரித்திரத்தை வெளிப்படுத்துகின்றது. ஆதியாகமத்தில் இரண்டு முக்கிய பகுதிகள் உள்ளன, அவைகள் இரண்டும் எல்லாவற்றிற்கும் ஆரம்பமாக உள்ளன என்று வேதாகமம் கூறுகின்றது. இதில் படைப்புக்கள் பற்றியும் மனித ஆரம்பம் பற்றியும் பதியப் பட்டுள்ளது. (1–11).இதில் இஸ்ரவேலர்களுடன் ஏற்படுத்திய விசேட தொடர்புகள் பற்றி பதியப்பட்டுள்ளது. (12–50) அத்துடன் மனிதவர்கத்தின் மீது கொண்டுள்ள நோக்கத்தையும் கூறுகின்றது.

**எழிதியவர்.**: மோசே.:

ஆதியாகமம் பல வருடங்களாக அனேக எழுத்தாளர்களால் எழுதப்பட்டிருக்கலாம் என்று சிலர் விசுவாசிக்கிறார்கள். சிலர் மோசே யாத்திரகாமம் தொடக்கம் உபாகமம் மட்டும் எழுதினார் என்று நம்புகிறார்கள், ஆனால் மோசேயின் பிறப்பிற்கு அனேக வருடங்களுக்கு முன்பு ஆதியாகமத்திலுள்ள விடயங்கள் இடம் பெற்றுள்ளபடியால் அவரால் இதனை எழுதியிருக்கமுடியாது என்று சந்தேகிக்கிறார்கள். மோசேதான் இதனை எழுதினார் என்று நம்புகிறார்கள்.

- எதியோப்பிய அரசகுடும்பத்தில் இருந்த காலத்தில்,மோசே ஒரு நல்ல எழுத்தாளனாகவும் சரித்திரவியலாளனாகவும் உருவாகினார், ஆதியாகமத்தில் அனேக எகிப்திய சொற்பதங்கள் பாவிக்கப் பட்டுள்ளன. (யாத்.. 2:1-11; அப்.7:22).

• மோசே ஒரு எழுத்தாளன் என்று வேதாகமம் குறிப்பிடுகின்றது. (யாத் 17:14; 24:4; உபாக. 31:9, 24; லூக்கா 20:28; யோவான் 1:45). உபாகமம் 31:24–32:47 எழுத்தாளனும் சரித்திவியலாளனும் என்று கூறுகின்றது.

• பஞ்சாகமத்தின் எழுத்தின் பண்புகளும், வடிவமும் ஒரே எழுத்தாளனே இதனை எழுதினார் என்பதைக் கூறுகின்றது.

• புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும், யூத எழுத்தளர்களும் மோசேதான் முழுப் பஞ்சாகமப் புத்தகத்தையும் எழுதினார் என்பதை ஏற்றுக் கொண்டார்கள். (யோவான் 1:45)

**காலமும் இடமும்.**

மோசே எப்போது ஆதியாகமப் புத்தகத்தை எழுதினார் என்பது சரியாகத் தெரியாதுள்ளது,சீனாய் மலையில் தேவ பர்வதமாகிய ஒரேப்பில் தேவன் நியாயப்பிரமாணம்,திருச்சட்டங்களை மேசேக்கு கற்றுக்குடுத்த காலங்களில் இவற்றை வெளிப்படுத்தியிருக்கலாம்.பின்னர் நாற்பதாண்டு வனாந்திர பயணத்தில் மேசே எழுதியிருக்க கூடும்.

**நோக்கம்.**

• உலக ஆரம்பத்தையும், உயிர்களின் ஆரம்பத்தையும், மானிடர்களின் ஆரம்பத்தையும் வெளிப்ப டுத்துவதற்காக.

• தனிப்பட்ட முறையில் உடன்படிக்கைகளை ஏற்படுத்தும் கர்த்தருடைய இயல்பை கூறுவதற்காக.

• எபிரேய மக்களின் ஆரம்ப சரித்திரத்தைக் பதிவு செய்வதற்காக.

• இயேசுதான் மேசியா என்பதை வெளிப்படுத்துவதற்காக.

**முக்கிய சம்பவங்கள்.**

• ஆதியாகமம் மனித வாழ்க்கையின் முக்கியத்துவம் பற்றி அறிமுகப்படுத்துகின்றது, பாவத்தினதும் அசுத்தத்தினதும் பிரச்சனைகள் பற்றியும், அதனுடைய தீர்வு பற்றியும் கூறுகின்றது.

• மனித சரித்திரத்தின் தேவைக்காக கர்த்தரால் கொடுக்கப்பட்ட நான்கு சட்டங்களில் மூன்று விடயங்களை இது அறிமுகப்படுத்துகின்றது . **திருமணம் (2), மனித அரசாட்சி (9:1-17), தெரிவு செய்யப் பட்ட இஸ்ரவேல் தேசம். (12) நான்காவது சபை. இது மத்தேயு 16 இல் கூறப்பட்டுள்ளது**.

• மறக்கமுடியாத குனாம்சங்களும், கதைகளையும் ஆதியாகமம் பக்கத்துக்குப் பக்கம் கூறுகின்றது, இவை மனித சரித்திரத்தில் வேறு எந்த புத்தகத்திலும் இல்லை, இந்தக் கதைகளினால் எல்லா மதத்து மக்களும் நன்மையடைந்தார்கள்.

• இதில் ஆபிரகாமின் உடன்படிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.(12:1-3), பழைய ஏற்பாட்டிலுள்ள எந்தக் கட்டுப்பாடும் அற்ற முதல் மூன்று முக்கிய உடன்படிக்கைகளைக் கூறுகின்றது. மற்றய இரண்டும்
» **தாவீதின் உடன்படிக்கை (2 .சாமு 7:9-16)**

» **புதிய உடன் படிக்கை(எரே. 31:31)**

**மற்றய வேதாகமப் புத்தகங்களுடன் ஒப்பிட்டுப்பார்த்தல்.:**

• கர்த்தருக்கு எதிராகச் செய்த முதலாவது மனித குழப்பம் ஆதியாகமத்தில் பதியப்பட்டுள்ளது. (3:1-6); இறுதிக் குழப்பம் வெளிப்படுத்தல் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ( வெளி. 20:7-10).

• பாவம் நுழைந்ததை ஆதியாகமம் பதிவு செய்துள்ளது. (3:1-6); பாவம் வெளியேறியதை வெளிப்படுத்தல் புத்தகம் பதிவு செய்துள்ளது. (வெளி20:10; 21:4-8).

• ஆதியாகமத்தில் சாபத்தின் ஆளுகையைப் பார்கிறோம்(3:9-19); வெளிப்படுத்தலில் சாபம் வெளியேற்றப்படுவதைப் பார்க்கிறோம். (வெளி. 22:3).

• மரணத்தின் ஆரம்பத்தை ஆதியாகமம் பதிவு செய்துள்ளது. (3:19) மரணத்தின் முடிவை வெளிப்படுத்தல் பதிவு செய்துள்ளது. (வெளி. 21:4).

• தற்போதுள்ள வானத்தையும் பூமியையும் படைத்தல் பற்றி ஆதியாகமம் பதிவு செய்துள்ளது.(1:1) புதிய வானமும் புமியும் படைக்கப்படுதல் பற்றிவெளிப்படுத்தல் பதிவுசெய்துள்ளது.(வெளி. 21:1).

**ரோமர் :** ஆதியாகமத்தில் இஸ்ரவேலர்களின் முற்பிதாவாக ஆபிரகாம் இருக்கின்றார்; விசுவாசிக்கும் யாவருக்கும் ஆபிரகாம் முற்பிதாவாக இருக்கிறார் என்று ஆதியாகமம் கூறுகின்றது. (ரோமர். 4:16).

**யோவான், 1யோவான்**

• எல்லாம் ஆரம்பத்தில் தொடங்கப்படுகின்றது, ஆனால் அவைகளின் தொடக்கத்தில் வித்தியாசங்கள் உண்டு. ஆதியாகமம் படைத்தலுடன் தொடங்குகின்றது.

யோவான், 1யோவான் என்பன படைப்பிற்கு முற்பட்ட காலத்துடன் தொடங்குகின்றது.வார்த்தை முன்னதாகவே இருந்தது.

**கலாத்தியர் :**

• இரண்டும் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிறோம் என்று கூறுகின்றது. (15:6; காலா. 3:6).

• இரண்டு புத்தகங்களிலம் எல்லா மனிதர்களையும் கர்த்தர் விடுவிக்க விரும்புகிறார் என்ற செய்தி கூறப்படுகின்றது. (12:2-3; கலா 3:8).

**சுருக்கம்.**

1. கர்த்தரும் ஆரம்ப மனித வர்க்கமும். (1–11)
2. (1:1–2:3)
3. ஏதேன் தோட்டம். (2:4-25)
4. வீழச்சி(3)
5. காயீனும் ஆபேலும் (4)
6. ஆதாமிலிருந்து நோவா வரைக்கும். (5)
7. வெள்ளம் (6–9)
8. நோவாவின் சந்ததி (10)
9. பாபேல் கோபுரம் (11:1-9)
10. சேம் தொடக்கம் ஆபிரகாம் வரை (11:10-32)
11. கர்த்தரும் முற்பிதாக்களும் (12–50)
12. ஆபிரகாம்(12:1–25:10)
13. ஆபிரகாமின் அழைப்பு (12:1-9)
14. ஆபிரகாம் எகிப்திற்குப் போதல் (12:10-20)

15. ஆபிரகாமும் லோத்துவும் பிரிந்து செல்லுதல் (13)
16. ஆபிரகாம் லோத்துவைக் காப்பாற்றல்.(14:1-16)
17. மெல்கிசிதேக்கு (14:17-24)
18. ஆபிரகமுடன் கர்த்தரின் உடன்படிக்கை (15)
19. ஆகாரும் இஸ்மவேலும் (16)
20. ஆபிராம் **ஆபிரகாமாக** மாறுதல்.(17:1-8)
21. விருத்தசேதன உடன்படிக்கை(17:9-14)
22. கர்த்தர் ஆபிரகாமுக்கு ஒரு மகனை வாக்களித்தார். (17:15–18:15)
23. சோதோமும் கொமோராவும். (18:16–19:29)
24. லோத்துவும் அவனது மகள் மாரும்.(19:30-38)
25. ஆபிரகாம், அபிமலேக்குவை ஏமாற்றுதல். (20)
26. ஈசாக்கு பிறத்தல். (21:1-7)
27. ஆகாரும் இஸ்மவேலும் துரத்தப்படல்.(21:8-21)
28. அபிமலேக்குவுடன் ஆபிரகாம் உடன்படிக்கை செய்தல்.(21:22-34)
29. ஈசாக்கைக் கொடுக்கும்படி ஆபிரகாமுக்குச் சொல்லப்படல்.(22)
30. சாரள் மரித்தாள், மக்போலாவில் புதைக்கப்பட்டாள். (23)
31. ஈசாக்கும் ரெபேக்காளும்.(24)
32. ஆபிரகாமின் மரணம்.(25:1-10)
33. ஈசாக்கு (25:11–27:46)
34. இஸ்மவேலின் மரணமும், அவரது சந்ததியும்.(25:12-18)
35. யாக்கோபும் ஏசாவும். (25:19-34)
36. ஈசாக்கிற்கு கர்த்தரின் வாக்குறுதி (26:1-5)
37. ஈசாக்கும் பெலிஸ்தர்களும். (26:6-35)
38. யாக்கோபு ஈசாக்கின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளல்.(27)
39. யாக்கோபு (28–36)
40. வானமும் ஏணியும். (28)
41. லேகாளும் ராகேலும்.(29:1-30)
42. யாக்கோபும் அவனது பிள்ளைகளும்.(29:31–30:24)
43. யாக்கோபும் லாபானும் (30:25–31:55)
44. யாக்கோபு கர்த்தருடன் யுத்தம் செய்தல்.(32)
45. யாக்கோபும், ஏசாவும் மறுபடி இணைதல். (33)
46. தீனளும் சீகேமிரும் (34)
47. யாக்கோபு பெத்தேலுக்குத் திரும்புதல்.(35)
48. ஏசாவின் சந்ததி.(36)
49. யோசேப்பு (37–50)
50. யோசேப்பும் கனவுகளும்.(37:1-11)
51. யோசேப்பு அடிமையாக விற்கப்படல்.(37:12-36)
52. யூதாவும் தாமாரும்.(38)
53. யோசேப்புவும் போத்திபாரின் மனைவியும்.(39:1-19)
54. சிறைச்சாலையில் யோசேப்பு (39:20–40:23)
55. பார்வோனின் கனவுகள். (41:1-36)
56. யோசேப்பு எகிப்தின் பிரதம மந்திரியாதல்.(41:37-57)
57. யோசேப்பு சகோதரை மன்னித்தல், உதவி செய்தல்.(42–45)
58. யாக்கோபுவும், குடும்பமும் எகிப்தில் குடியமர்தல்.(46–47)
59. யாக்கோபின் கடைசி நாட்கள்.(48–49)

60. யோசேப்பின் கடைசி நாட்கள்.(50)

**கர்த்தரும் ஆரம்ப மனிதகுலமும்.(1–11)**

***ஆதியாகமம்*1:1** எப்போது, யார், எதை?
வேதாகமத்தின் முதல் வார்த்தை உன்னதமானவர் பூமியையும் வானத்தையும் உருவாக்கினார் என்று கூறுகின்றது.

- எப்போது? உருவாக்கினார். : ஆரம்பத்தில் . . .”
- யார்? “. உருவாக்கினார்: . . கர்த்தர்.. . .”
- எதனை உருவாக்கினார்.? : “. . . வானத்தையும் பூமியையும் உருவாக்கினார்..” இது உண்மையின் சாதாரண கூற்றாகும். . அதைத் தொடர்ந்து வருகின்ற வசனங்கள் அவருடைய உருவாக்கும் செயற் பாட்டை விபரிக்கின்றன. அவற்றை விஞ்ஞான முறையில் விளக்கவில்லை.

விசுவாசிகள் இதனை விசுவாசித்து ஏற்றுக் கொள்கின்றார்கள்.(எபி. 11:3).. விஞ்ஞானிகள் உலகம் உண்டானதற்கான பல கொள்கைகளைக் கூறுகின்றார்கள்.அதில் முக்கியமானத பிக்பாங் கொள்கை (Big Bang theory )—

ஆதியாகமம் 1:1ம் அதன் உலகப் பார்வையும்.
**ஆதியா. 1:1** ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.

முடிவில்லாத கர்த்தரின் படைப்பைபற்றி இதன் மொழி பெயர்ப்பாளர்கள் என்ன கூறுகின்றார்கள்.?

- கடவுள் இல்லை என்று கூறுபவர்களுக்கு ,கர்த்தரே இதன் படைப்பாளி என்று கூறுகின்றது.
- பல கடவுள் நம்பிக்கை உடையவர்களுக்கு ஒரேஒரு கடவுள் மட்டும்தான் உண்டு என்று கூறுகின்றது.
- எல்லாமே கடவுள் என்று கூறுபவர்களுக்கு கர்த்தர் தான் உருவாக்கியவற்றினின்று தனியாக இருப்பதாகக் கூறுகின்றது.
- பரினாமக் கோட்பாட்டில் நம்பிக்கையுடையவர்களுக்கு உலகம் படைக்கப்பட்டது என்றும், அவைகள் பரினாமத்தினால் உருவாகவில்லை என்று கூறுகின்றது.
- ஆன்மீகத்துறை சாராதவர்களுக்கு பொருட்கள் நித்தியமானவையல்ல என்றும், அவை தானாக உருவாகவில்லை என்றும் கூறுகின்றது.
- தானாக உருவாகியவை என்று கூறுபவர்களுக்கு படைப்பில் ஒரு நோக்கம் உண்டு என்று கூறுகின்றது.

**1:2** அவர் உருவாக்கிய பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது. படைப்பின் வாரத்தில் பூமியானதுவெறுமையும், ஒழுங்கின்மையுமாய் இருந்தது. அங்கே மண்ணும்,, நீரும் இருந்தது, வெளிச்சம் இருக்கவில்லை. புதிதாகப் படைக்கப்பட்ட உலகத்தின் மேல் பரிசுத்தஆவியானவர் அசைவாடிக் கொண்டிருந்தார். பரிசுத்த ஆவியானவர், திரித்துவத்தின் மூன்றாம் நபராகும்., இவர் பெந்தகொஸ்தே நாளில் காணப்பட்டார். இங்கு அவர் தன்னுடைய பெரிய பிரசன்னத்தை படைப்பின் ஆரம்பத்திலேயே காண்பிக்கின்றார். ( அப் 2:1) இயேசுக்கிறிஸ்த்து,தேவகுமாரன், திரித்துவத்தின் இரண்டாவது நபர், படைப்பில் பங்குபற்றியுள்ளார் என்பதை சில இடங்களில் வாசிக்க முடிகின்றது (யோவான் 1:1-3; கொலோ. 1:16; எபிரே. 1:2).

.

1:3-5 முதலாம் நாள்.*:*

வெளிச்சமும் காலமும்.

கர்த்தர் ஏற்கனவே சிலவற்றை உருவாக்கியிருந்த போதிலும் (1:1-2), 1:3 தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று. கர்த்தருடைய வார்த்தை எல்லாவற்றையும் உருவாக்கியது. (சங் 33:6; .எபிரே 11:3). முதலாம் நாளில் வெளிச்சத்திற்கும் இருளுக்கும் இடையில் பிரிவு இருந்தது. இதனைக் கர்த்தர் பகல் என்றும் இரவு என்றும் அழைத்தார்.. இது நல்லது என்று கண்டார்.

**1:6-8** இரண்டாம் நாள்.: .*ஆகாகவிரிவும், தண்ணீரும்.*

தண்ணீர்களுக்கு மத்தியில் கர்த்தர் ஆகாய விரிவை உண்டாக்கினார். இதனால் ஆகாய விரிவுக்கு மேலேயுள்ள தண்ணீருக்கும் நிலத்திலுள்ள தண்ணீருக்கும் இடையில் விரிவை உண்டாக்கினார்.

**1:9-13** *மூன்றாம் நாள்.:*

நிலம், கடல், புல், மரம்.

கர்த்தர் நிலத்திலிருந்த தண்ணீர்களை ஓரிடத்தில் சேரப்பண்ணினார், அப்போது வெட்டாந்தரை தோன்றியது. ஒன்று சேர்ந்த தண்ணீர்களுக்கு சமுத்திரம் என்று பெயரிட்டார். (1:10).
பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின்மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் உண்டாக்கினார்.(1:11)

**1:14-19** *நான்காம் நாள்.:* சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள்.

கர்த்தர் இப்போது வெளிச்சம் கொடுப்பவற்றை உருவாக்கினார். அவை மூன்று நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டன. கர்த்தருடைய படைப்பின் செயற்பாட்டின் அடையாளங்களாகும். (சங். 8:3; ரோமர். 1:19-20); பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்கள் உண்டாக்கினார்., அவைகள் அடையாளங்களுக்காகவும் காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கின்றன.

**1:20-23** ***ஐந்தாம் நாள்.*** *:* பறவைகளும்,கடலில் நீந்தும் ஐந்துக்களும்(மீன்களும்)

கர்த்தர் சிறகுள்ள ஜாதிஜாதியான சகலவிதப் பட்சிகளையும் நீர்வாழும் ஐந்துக்களையும், உருவாக்கினார்.

**1:24-25** ***ஆறாம் நாள்.*** *(1):* மிருகங்கள்.

கர்த்தர் ஜீவஜந்துக்களாகிய நாட்டுமிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், காட்டுமிருகங் களையும், உருவக்கினார்

**1:26-31** ***ஆறாம் நாள்*** *(2):* கர்த்தர் தமது சாயலாக மனிதனை உருவாக்கினார்.

ஆறாம் நாளில் தம்முடைய சாயலாக மனித வர்க்கத்தை உருவாக்கினார். (1:26). தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.

மனிதனுக்கு உலகம் முழுவதையும் பொறுப்பெடுத்து, அவர்கள் சந்ததியினரால் அதை நிரப்பும் படி கட்டளை பிறந்தது. மனிதவர்க்கம் கர்த்தரின் சாயலக உருவாக்கப்பட்டது,ஆவி ஆத்துமா என்ற உள்ளான பகுதியலும் சரீரம் எனும் வெளியான பகுதியாலும் மனிதன் உண்டாக்கப்பட்டான்.கர்த்தர் தன்னுடன் உறவாடுவதற்காக தன்னுடைய சாயலை தந்து மனிதனை தனது பிள்ளையாக்கி கொண்டார். எல்லா மிருக வர்க்கங் களுக்குள்ளும், கர்த்தரைப் போன்ற குணாம்சங்களான சுயகவனம், நல்லதையும் கொட்டதையும் தெரிவு செய்யும் தன்மையுண்டு,மேலும் மனிதனுக்கு கர்த்தருகிருக்கும் அன்பு இரக்கம் மன்னிப்பு பொறுமை போன்றனவும், தன்னை உருக்கினவரை தொடர்பு கொள்ளும் தன்மை கொண்ட

பகுத்தறியும் ஆற்றலை கொண்டவனாயிருந்தான்.உருவாக்கினது உருவாக்கினவரை அறியவும், அத்துடன் உருவாக்கினவரை தள்ளிவிடுவதற்கான சுதந்திரமும் கொடுக்கப்பட்டுள்ளது.அந்த சுதந்திரம் இல்லாமல் இருக்குமாயின் றோபோ போலவே இருக்கும். 3:6இல் முதல் தடவையாக மனித வர்க்கம்,தெரிவு செய்வதற்கான சுதந்திரத்தை செயற்படுத்தி கர்த்தரைத் தள்ளினார்கள். கர்த்தர் தன்னைப் பன்மையில் இருப்பதாகக் கூறுகின்றார்.. எமது சாயலில் (1:26). இதுவே வேதாகமத்தின் முதல் திருத்துவத்திற்கான சான்றாக உள்ளது. அதாவது கர்த்தர் மூன்று ஆள்தத்துவம் உடையவர். **பிதா, குமாரன், பரிசுத்த ஆவி.** திரித்துவம் என்ற சொல் வேதாகமத்தில் இல்லை, வித்தியாசமான பகுதிகளில் கர்த்தத்துவத்தின் கூட்டுச்சம்பந்தமாகப் பேசப்பட்டுள்ளது. (11:7; ஏசா 48:12-16; மத்.28:19; யோவான்14:26; 2கொரி. 13:13; எபேசி 1:1-14 ,1 போது1:2).

**2:1-3** ***ஏழாம் நாள்: படைப்பு பூர்த்தியானது. கர்த்தர் இளைப்பாறினார்.***

படைப்பின் வேலைகள் பூர்த்தியானவுடன், கர்த்தர் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். கிழமையில் வேலைகள் இடம்பெற்று இதன் அடிப்படையில்தான் இஸ்ரவேலர்களின் சபாத்(sabath)ஓய்வு நாள் கொண்டாடப் படுகின் றது . (யாத்.. 20:8-11).விசுவாசிகளாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஜனங்கள் வாராந்த ஓய்வு நாளில் நன் மைடைகின்றார்கள். ( மார் 2:27).சனிக்கிழமையாக இருந்த கிறிஸ்தவர்களின் ஓய்வு நாள், கிறிஸ்து உயிர்த் தெழுந்த நாளாகிய ஞாயிற்றுக் கிழமையை ஓய்வுநாளாகக் கொண்டாடுகின்றார்கள் . வேதாகமம், ஓய்வு நாளை நித்திய ஜீவனின் அடையாளமாகக்; கொள்கின்றது. (எபி. 4:1-10).துல்லியமான நாள்? ஆதியாகமத் தில் கூறப்பட்ட ஒரு நாள் 24 மணித்தியாலங்களைக் கொண்டதா? ஜனங்கள் இதற்கு நான்கு வகையாக விடைகூறுகின்றார்கள்.

• பரினாமக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை.

• ஆவிக்குரிய வேதாகமத்தின் தன்மைகளை ஏற்றுக் கொள்கிறார்கள் அதனால் அவர்கள் விஞ்ஞானத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

• 24 மணி நேரத்திற்கான நாள் என்று கணக்கெடுக்கிறார்கள். .வேதாகமத்தில் ஆறு 24 மணி நேரத்திற்கான நாள் என்றே கணக்கெடுத்துள்ளார்கள்

. எண்கணித முறைப்படியே முதலாவது, இரண்டாவது நாள் என்று கணக்கிட்டுள்ளார்கள்.

• ஒவ்வொரு நாளும் காலை, மாலை என்ற பதங்களும் பாவிக்கப்பட்டுள்ளன. ( எபிரேய பதங்கள் பாவிக்கப்பட்டுள்ளன 1:5, 8, 13, 19, 23, 31).

• மோசே படைப்பைப்பற்றிப் பேசும் போது, அவர் 24- மணிநேர நாள்களையே குறிப்பிடுகின்றார். (யாத். 20:11; 31:17).

• நான்காம் நாளில் சூரியனும் சந்திரனும் உருவாக்கப்பட்ட படியால் முதல் மூன்று நாள்களும் நீண்ட மணிநேரங்களைக் கொண்ட நாள்களாக இருக்கலாம் எனச் சிலர் சந்தேகிக்கின்றர்கள். . ஆனாலும் முதல் மூன்று நாட்களும், காலையும், மாலையும் வந்து போயின.


**2:4-14** . ***ஒரு பூரணமான தம்பதியினருக்கு பூரணமான வீடு***

ஏதேன் என்ற பெயருள்ள ஒரு தோட்டத்தை கர்த்தர் உருவாக்கினார், அது மரங்களுக்கிடையில் அமைந்திருந்தது, நிலத்திலிருந்து எழும்பும் தண்ணீரினால் நனைக்கப்பட்டிருந்தது. (2:6) அத்துடன் அதனைச்சுற்றி நான்கு கிழைகளைக் கொண்ட ஆறு ஓடியது. அவைகளின் இரண்டு கிழைகளின்

பெயர்கள்,இதெக்கோல், ஐபிராத்து, இன்றய காலத்து ஈராக்கிலே ஏதேன் இருந்தது என்று கருதுகிறார்கள். 2:4

2:4–4:26 என்பவை, வானத்தையும் பூமியையும் உருவாக்கின கணக்கைக் கூறுகின்றன. (2:4), வெற்றியான பகுதிகள் இவ்வாறே அறிமுகப் படுத்தப்படுகின்றன. ஆதாமுடைய சந்ததியினரின் சரித்திரம். (5:1–6:8); நோவுடையது(6:9–9:29); நோவுடைய பிள்ளைகளுடையது.(10:1–11:9); சேமுடையது (11:10-26); தேராகுடையது(11:27–25:11); இஸ்மவேலுடையது(25:12-18); ஈசாக்குடையது.(25:19–35:29); ஏசாவினுடையது.(36:1–37:1); யாக்கோபுவினது(37:2–50:26).

**ஆதியாகமம் 1-11 புவியியல் நிலை**




**2:15-17 . கர்த்தர் மனிதனுக்கு ஒரு வேலை கொடுத்தார், ஒரு எச்சரிப்பும் கொடுத்தார்.**

தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; **அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.** *கீழ்படிவை எதிபார்த்து கர்த்தர் இவ்வாறு சொன்னார்.எல்லா கனிகளையும் உண்ண அனுமதித்து ஒரு கனியை மட்டும் உண்ண வேண்டாம் என்றார்.*

**2:18-25** ***அவன் நித்திரை கொள்ளும் போது, அவனுடைய சரீரத்திலிருந்து மனைவியை உருவாக்கினார்.***

கர்த்தர் தாம் உருவாக்கின மிருகங்களை ஆதாமிடத்திற்குக் கொண்டுவந்து அவற்றிற்குப் பெயரிடுமாறு கூறினார். (2:19). கர்த்தர் ஆதாமுடைய விலா எலும்பிலிருந்து பெண்ணை உருவாக்கி அவனுக்குத் துணையாகக் கொடுத்தார்.. கர்த்தர் அவர்கள் திருமணத்தை நடத்தினார், ஆதாமும் அந்தப் பெண்ணும் கணவனும் மனைவியுமானார்கள்.ஆதாம் ஏவாள் என்று அழைத்தான்.

• **இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன்தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.** (2:24) இதுவே திருமணத்தின் ஆரம்பமாகும்.2:24 விவாகஇரத்து கர்த்தருடைய வார்த்தைக்கு விரோதமானது.(மத் 19:5).

• திருமணத்திற்கான காரணங்களில் ஒன்று இனப்பெருக்கமாகும். (1:28).

• திருமணத்தில் அன்பு காணப்படல் வேண்டும்.— கிறிஸ்த்து சபையை நேசிப்பது போன்ற அன்பாகும். ( எபேசி. 5:25-29)

**3:1-5** . மிகவும் தந்திரமான உயிரினம்.

பூரணமான ஏதேன் தோட்டத்திற்குள் சாத்தான் சர்ப்பத்திற்கூடாப் பேசினான். ( வெளி 12:9; 20:2). தடை செய்யப்பட்ட மரத்தின் பழத்தைச் சாப்பிட்டால் நீ கடவுளைப் போல் வருவாய் என்று கூறி, சாத்தான் கர்த்தருடைய வாக்கை மீறச்செய்தது.

**3:6** ***முதலாவதும் சாவுக்கேதுவான பாவமுமாகும்.***

தடை செய்யப்பட்ட பழத்தைதைச் சாப்பிட்டபின் அந்தப் பெண் அதனை ஆதாமுக்கும் கொடுத்தாள்., அவரும் அதைச் சாப்பிட்டார். கர்த்தர் கொடுத்த உரிமையைப் பரிசோதித்துப் பார்ப்பதற்காக , அவர்கள் கீழ்ப்படியாமையைத் தெரிவு செய்தார்கள். இந்த முதலாவது மனிதவர்க்கத்தின் பாவத்தின் விழைவைக் குறித்து பரிசுத்த பவுல் விளக்குகையில், ஆதாம் பாவம் செய்தபோது , பாவமானது மனித வர்க்கத்திற்குள் நுழைந்தது, ஆதாமுடைய பாவம் மரணத்தைக் கொண்டு வந்தது.பாவம் எல்லோருக்குள்ளும் பரவியது, அதனால் ஒவ்வொருத்தரும் பாவம் செய்தார்கள். (ரோ 5:12). இந்த விளக்கத்தை நாம் கவனிக்கும் போது

**குறிப்பு :**

• ஆதாமுடைய கீழ்ப்படியாமையினால், முன்பே பாவம் பூரணமான உலகத்திற்குள் நுழைந்துவிட்டது.
• பாவம் மரணத்தைக் கொண்டு வந்தது---- தாவரங்கள், மிருகங்கள், அதேபோல் மனிதர்கள் யாவர் மேலும் மரணம் வந்தது. (3:17-18; ரோ. 8:20-22).

• இந்த முதல் பாவத்தினால் மக்கள் யாவரும் பாவியானார்கள்.

• ஆரம்ப பாவத்தினால் எல்லோரும் பாவம் செய்தவர்களாகினோம். (ரோ. 3:23). இந்தப்பாவம் மனிதனின் வீழ்ச்சி என்று அழைக்கப்படுகின்றது.ஆதாமினுடைய பாவமானது ஆரம்ப பாவம் என்று அழைக்கப்படு கின்றது. நடைமுறையில் முதலில் ஏவாள்தான் சாப்பிட்டாள், ஆனால் தெய்வீக நிலமையில் ஆதாமே முதற்பாவி என்று கூறுகின்றது. (ரோ. 5:12; 1 திமோ. 2:14).

மனித குலத்தின் தலைவன் என்ற விதத்தில் ஆதாமே அந்தப் பாவத்திற்குப் பொறுப்பாளியாகுறார். யோவான் மூன்று சோதனைகள் குறித்துப் பேசுகிறார். **: சரீரத்தின் இச்சை, கண்களின் இச்சை,ஜீவனத் தின் பெருமை. (1 யோவான் 2:16).**

சாத்தான் இந்த மூன்று சோதனைகளிலும் ஏவாளைச் சோதித்தான்.

- ஏவாள் அந்தப்பழம் பார்வைக்கு அழகானதாகும் என்று கண்டாள். *(சரீரத்தின் இச்சை)*
- இதுமிகவும் நன்றாக இருக்கிறது *(கண்களின் இச்சை)*
- இது அவளை ஞானவான்களாக்கும். *(ஜீவனத்தின் பெருமை)*.சாத்தான் இயேசுவையும் இப்படியே சோதித்தான். (மத். 4:1-11).

**3:7-13** ***கசப்பான பழம்:: வெட்கம், பயம், சாக்குப்போக்கு.***

ஆதாமும் ஏவாளும் இணைந்து ஏதேன் தோட்டத்தில் சந்தோசமாக இருந்தார்கள். கர்த்தரும்தோட்டத்தில் வந்து அவர்களுடன் சம்பாஷிப்பார். (3:8). இப்போது, கர்த்தருடைய சத்தம்கேட்கிறது, அவர்கள் அதற்குவெட்கப்படுகிறார்கள், பயப்படுகிறார்கள்,அவர்கள் தங்களை மறைத்துக் கொள்ள முயல்கிறார்கள் . அவர் அவர்களைக் கண்டு என்ன செய்தீர்கள் என்று கேட்டார். ஆதாம் ஏவாளைக்குற்றப்படுத்தினாள், ஏவாள் சர்ப்பத்தை குற்றம் சாட்டினாள், கர்த்தர் அவர்கள் மூவரும் கணக்கு ஒப்புவிப்பார்கள் என்று கூறினார். (3:14-24).

**3:14 தந்திரமுள்ள சர்ப்பத்திற்கான நீயாயத்தீர்ப்பு**

கர்த்தர் சர்ப்பம் என்ன செய்தது என்று கேட்காமல் தன்னுடைய நியாயத் தீர்ப்பைக் கூறினார். :தன்னுடைய சரீரத்தை சாத்தானுக்கு கொடுத்தபடியால், தூசியில் ஊர்ந்து திரியும்படி சர்ப்பத்தை சபித்தார். . சான்றுகளின்படி, வீழ்ச்சிக்கு முன்பாக சர்ப்பமானது ஊர்ந்து திரியவில்லை என்று அறிகிறோம். சில ஆய்வாளர்கள் இது இறக்கைகளைக் கொண்டிருந்ததாகவும், நிமிர்ந்து நிர்க்கக் கூடியதாகவும் இருந்தது என்று கூறுகின்றார்கள்.. சர்ப்பத்தினுடைய நியாயத்தீர்ப்பானது, மிலேனியம் அரசாட்சிவரை நீடிக்கும் என்பதை ஏசாயா, 65: 25 சுட்டிக் காண்பிக்கின்றது,மிகுதியான மிருகங்கள் அமைதியாக இருந்தன. வேதாகமம் முழுவதும் சர்ப்பமானது நம்பிக்கைத் துரோகத்திற்கும் பாவத்திற்கும் அடையாளமானதாக இருக்கின்றது. (சங் 58:3-4; மத் 23:33).

**3:15** ***பழைய சர்ப்பத்திற்கான நியாயத் தீர்ப்பு.***

பழைய சர்ப்பம் என்று அழைக்கப்படுகிற சாத்தான்,அவர் பாம்பின் சரீரத்தை பயன்படுத்தி ஆதாமையும் ஏவாழையும் சந்தித்தான். அவனை ஸ்திரீயின் வித்தாகிய இயேசுக்கிறிஸ்து வெற்றி கொண்டார், (வெளி 20:2),. சாத்தான் கிறிஸ்த்துவின் குதிக்காலைக் நசுக்குவான் அது சாவுக்கேதுவான காயமாக இராது .;ஆனால் கிறிஸ்த்துவோ அவனைக் மரணத்துக்கு ஏதுவாக அவனது தலையை நசுக்குவார்., ஏசா யா சுவிஷேசத்தின் முதல் பகுதியை இவ்வாறு கூறுகின்றார், அவர் எங்களுக்காக காயப்படுத்தப்பட்டு நொருக்கப்பட்டார் என்று கூறுகின்றது.I (ஏசா. 53:5). பரிசுத்தபவுல் சிலுவைக்குப் பிற்பாடு இவ்வாறு கூறுகிறார். (ரோ 16:20). மனிதவர்க்கத்திற்கு சுயாதீனம் கொடுக்கப்பட்டுள்ளது, ஆனாலும் அவர்கள் விழுந்து போவார்கள் என்றும் ,அவர்களுக்கான இரட்சிப்பின் திட்டம் ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளது என்றும் கர்த்தர் அறிந்துள்ளார். (எபே 1:4-5).

**3:16-21 .மன்னிப்பு கொடுக்கப்பட்டுள்ளது, ஆனாலும், மரணமும் துக்கமும் தீர்ப்பாக்கப்பட்டது.**

கர்த்தர் ஆதாமையும், ஏவாழையும் கீழ்ப்படியாமைக்காக மன்னித்தார், அவர்களை மிருகத்தோலினால் (ஆட்டு) உடுத்துவித்தார். (3:21). அந்த கொல்லப்பட்ட மிருகங்கள் கிறிஸ்த்துவை பிரதிபலிக்கின்றது, அவர் எல்லாப் பாவிகளையும் நீதி என்னும் வஸ்த்திரத்தால் உடுத்துவிக்கின்றார். அவர்கள் மன்னிக்கப்பட்டபோதிலும் பாவத்தின் விழைவாக துக்கத்தை அனுபவித்தேயாகவேண்டும். . பெண்ணானவள் குழந்தையைப்

பெற்றுக் கெள்ளும் போது வேதனையை அனுபவிப்பாள், அதேவேளையில் மனிதன் உணவைப் பெற்றுக் கொள்வத ற்காக கடுமையாக உழைக்க வேண்டும்.. குழந்தை பெற்றுக் கொள்வதோ, அல்லது சரீரத்தினால் வேலை செய்வதோ பாவத்தினால் வந்ததல்ல, அவைகள் கர்த்தரின் திட்டத்தில் ஒன்றாகும். (2:15). ஆனால் அவை இரண்டும் வீழ்ச்சிக்குப்பின்பாக வேதனை அதிகமாக்கப்பட்டது. கர்த்தருடைய தண்டனையின் உச்சநிலையாக ஆதாமுக்கும் ஏவாளுக்கும் சரீரமரணத்தை அனுமதித்தார். (3:19),முன்பு கூறிய எச்சரிக்கையை நிறைவேற்றினார். (2:17).

### வேதாகமம் இரண்டுவிதமான மரணத்தை கூறுகின்றது

ஒன்று சரீரப்பிரகாரமான மரணம், மற்றது ஆவிக்குரிய மரணம் என்பவைகளாகும். இரண்டும் பிரிவினையைக் காண்பிக்கின்றன. சரீரப்பிரகாணமான மரணம் சரீரத்திலிருந்து ஆவியைப்பிரிப்பது மட்டும்தான் அதேபோல் ஆவிக்குரிய மரணம் என்பது இரட்சகரிடமிருந்து பாவியைப்பிரிப்பது மட்டுமாகும். (மத். 25:41). வேதாகமத்தில் இரண்டு பிறப்புக்கள் பற்றி கூறப்பட்டுள்ளது, மனிதன் மனித உயிரைமட்டும் பிறப்பிக்கமுடியும், ஆனால் பரிசுத்த ஆவியானவர் பரத்திலிருந்து புதிய ஜீவனைக் கொடுக்கின்றார். (யோவான் 3:6).

- ஒரு முறை பிறப்பதும் இரண்டு முறை மரிக்கவேண்டும். என்பதே அதன் அர்த்தமாகும். ஒரு விசுவாசியாக இராதவன் சரீரமணமும், ஆவிக்குரிய மரணமுமான இரண்டு மரணங்களையும் அனுபவிப்பான், (எபிரே 9:27).

- இரண்டு பிறப்புக்கள் உள்ளவர்களுக்கு (யோவான் 3:3) ஒருமுறையே மரணம் சம்பவிக்கும் , **ஒரு விசுவாசி ஆவிக்குரிய மரணத்தை அடையமாட்டான். (யோவான் 3:16).**

### 3:22-24 ஜீவ விருட்சத்திடனிருந்தும், ஏதேன் தோட்டத்திலிருந்தும் கலைக்கப்பட்டார்கள்.

மரணத்திற்கான தீர்ப்பு (3:19) ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்திலிருந்தும், ஜீவ விருட்சத்தினிடமிருந் தும் துரத்தப்பட்டார்கள். கலைக்கப்பட்டது இரக்கத்தினாலாகும், அது நியாயத்தீர்பைப் போன்றதாகும். அவர்கள் ஜீவ விருட்சத்தின் கனியைச் சாப்பிட்டால், பாவத்துடன் மரணமில்லாமல் துக்கமான துயரமான வாழ்வைத்தான் வாழ வேண்டும்.

### 4:1-15 முதலாவது குடும்பமும்,முதலாவது கொலையும்.

ஏவாள் காயீனையும், ஆபேலையும் பெற்றுக் கொண்டாள். ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனானான், காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார். காயீனை யும் அவன் காணிக்கையையும் அவர் அங்கிகரிக்கவில்லை. விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியி லும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான்; கர்த்தருக்குப் பிரியமான காணிக்கை எதுவென்று காயீன் அறிந்திருந்தான், அத்துடன் இரண்டாவது தடவை யாகவும் சரியான காணிக்கையைக் கொடுப்பதற்கான சந்தர்ப்பமும் கிடைத்தது. (4:7). அவன் அந்த சர்ந்தப் பத்தை பயன்படுத்த விரும்பாமல், அவனுடைய கசப்பினால் ஆபேலைக் கொலை செய்தான். கர்த்தர் காயீ னை பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய் என்று கட்டளையிட்டார். தன்னுடைய பெற்றோருக்கு இன்னும் அதிக பிள்ளைகள் இருப்பதால், அவர்களில் யாராவது ஒருவர் தன்னைப் பழிவாங்கக்கூடும் என்று பயமடைந்த காயீன் கர்த்தருடைய பாதுகாப்பைக் கோரினார். அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: காயீனைக் கொல்லுகிற எவன் மேலும் ஏழு பழி சுமரும் என்று சொல்லி; காயீனைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் அவனைக் கொன்றுபோடாதபடிக்குக் கர்த்தர் **அவன்மேல் ஒரு அடையாளத்தைப் போட்டார். (4:15)**

### 4:16-24 *காயீனுடைய பிள்ளைகள்.*

காயீன் சந்ததியினர் சங்கீதம்,கால்வடை வளர்ப்பு, கருவிகள் உற்பத்திசெய்தல் என்பவற்றை கண்டு பிடித் தார்கள்.லாமேக்கு தான் பழிவாங்கியதைக்குறித்து பெருமையாகப் பேசிக் கொண்டிருக்கின்றான். (4:23-24),

காயீன் தன்னுடைய சகோதரிகளில் ஒருத்தியையே திருமணம் செய்திருந்தான். (5:4);

**4:25-26** ***சேத் இன்னுமெரு ஆபேல்.***

ஏவாள் காயீன் கொலைசெய்த ஆபேலுக்குப் பதிலாக, மூன்றாவது புத்திரனைப் பெற்றபோது ஆபேலுக்குப் பதிலாக, தேவன் எனக்கு வேறொரு புத்திரனைக் கொடுத்தார் என்று சொல்லி, அவனுக்குச் **சேத்** என்று பெயரிட்டாள்.

**5:21-28** ***உயிருடன் பரத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட முதல் மனிதன்.***

ஏனொக்கினுடைய மகன் மெத்துசலா 969 வருடங்கள் வாழ்ந்தார்.இவர் தான் பூமியில் அதிக ஆண்டுகள் வாழ்ந்த மனிதன். ஏனோக் , உயிருடன் வானத் திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இருவரில் முதலாவது ஆளாவார். மற்வர் எலியாவாகும். (2 ராஜா 2:11). கிறிஸ்துவின் இரண்டாவது வருகையின் போது உயிருடன் இருக்கும் விசுவாசிகளும் உயிருடன் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று வேதாகமம் கூறுகின்றது. (1 கொரி. 15:51-52; 1 தெசலோ. 4:16-17). ஏனொக்கு மாபெரும் விசுவாச மனிதனாக இருந்தார். (எபிரே. 11:5). அவர், அவருடைய பேரனாகிய நோவாவைப் போல் கர்த்தருடன் நெருங்கிய உறவைக் கொண்ட மனிதனாகும். (5:24; 6:9). ஏனொக்கு முதலாவது **பிரசங்கியாகப் பதிவு செய்** யப்பட்டுள்ளார். (யூதா 1:14-15).

**5:29–6:7 நோவா, தேவகுமாரர் ,மனுஷ குமாரத்திகள்**

நோவாவின் காலத்தில் மனிதர்கள் அதிகம் கெட்டவர்களாய் இருந்தார்கள், அதனால் அவர்கள் யாவரையும் அழித்துவிடுவதற்கு கர்த்தர் முடிவு செய்தார்.. தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தரிய முள்ள வர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொண்டு அவர்களைத் திருமணம் செய்த்ததே அங்கு காணப்பட்ட அசுத்தமாகும்.தேவகுமாரர் என்பவர்கள் சேத்துவின் பரம்பரையினராக இருக்கலாம், மனிதகுலத்தில் அழகானவர்கள் என்று கூறப்பட்டவர்கள் கர்த்தர் இல்லாத பரம்பரையினராகிய காயீனுடைய சந்த்தியினராக இருக்கலாம். சிலர் தேவகுமாரர் என்பவர்கள் விழுந்து போன தேவதூதர்கள் எனவும் கருதுகின்றார்கள்.

**6:8-13 . கர்த்தருடைய இரக்கத்தைப் பெற்றுக் கொண்ட குடும்பம்.**

கர்த்தர் இல்லாத உலகத்தில் நோவும் அவனது குடும்பமும் கர்த்தருடன் வாழ்ந்து வந்தர்கள். . கர்த்தர் மனித வர்க்கத்தை அழிக்கப் போவதாக எச்சரித்தார். . நீண்ட காலத்திற்கு முன்பாக ஆபிரகாமுக்கு கர்த்தர் வாக்களித்தார், மோசேய் கூடாக நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். கிறிஸ்து வருவதைக் கட்டளை யிட்டார் ,நோவாவின் குடும்பம் கிருபையை அனுபவித்தார்கள்.. பழைய ஏற்பாட்டுடன் நியாயப்பிரமா ணத்தை இணைப்பதும், புதிய ஏற்பாட்டுடன் கிருபையை இணைப்பதும் இயல்பானதாகவே இருக்கின்றது. இன்னும் சிறப்பாகக் கூறுவதாயின் எப்படி கர்த்தர் பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர்களுக்கும், பாவிகளு க்கும் கிருபை காண்பித்தார் என்றும், புதிய ஏற்பாட்டில் சபைக்கும் , பாவிகளுக்கும் கிருபைகாண்பிக்கின் றார் என்பதைக் கூறுகின்றது.

**6:14-22** *பிறர் உதவியின்றி நோவாவும் பிள்ளைகளுமாக கட்டிய பேழை.*

கர்த்தர்,நோவாவின் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக ஒரு பெரிய கப்பலைக்கட்டும் வண்ணம் நோவாவுக்கு கூறினார்.சுத்தமான சகல மிருகங்களிலும், ஆணும் பெண்ணுமாக எவ்வேழு ஜோடும், சுத்தமல்லாத மிருகங்களில் ஆணும் பெண்ணுமாக ஒவ்வொரு ஜோடும்சேர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார். , (7:2-3)

**7:1-10 . அவர்கள் பேழைக்குள் நுழைந்து ஒரு வாரம் காத்திருந்தார்கள்**. கட்டுமான வேலை முடிந்து ,நோவா தன்னுடைய குடும்பத்தையும் மிருகங்களையும் பேழைக்குள் கொண்டுவந்தான், பின்னு ஒரு

வாரம் காத்திருந்தார். . கர்த்தர் நோவாவை நோக்கி: நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசி யுங்கள்; இந்தச் சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன். (7:1) இதுவே வேதாக மத்தில் காணப்படும் முதலாவது அழைப்பாகும். இங்கு உட்பிர வேசிக்கும்படி கட்டளை கொடுக்கபடுகி ன்றது. ஆனால் இயேசு தன்னிடத்தில் வரும்படி கேட்கிறார். வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லா ரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். (மத் 11:28). இது திரும்பவுமாய் வெளிப்படுத்தலில் கூறப்படுகின்றது.22:17 ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; கடைசி நியாயத்தீர்ப்பிலும் இவ்வாறு அழைப்பு வருகிறது , அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப் பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்த ரித்துகொள்ளுங்கள்.(மத்.25:34).

**7:11-24 . வெள்ளம்.**

நாற்பது நாட்கள் மழையுடன் வெள்ளம்ஆரம்பமனது. ;வெள்ளம் உயர்ந்த மலையைவிட 20 அடிகள் உயரமாக இருந்தது. ,எல்லாமனிதர்களின் ஜீவனையும் அழித்தது. வெள்ளம் குறித்து முடிவில்லாத வாதங்கள் இடம்பெறுகின்றன.

- எவ்வளவு காலம் வெள்ளம் நீடித்து?.வேதாகமத்தின் கூறப்பட்டது 371 நாட்களாகும்.பேழைக்குள் ஏறியதுமுதல் (7:7) வெளியே வந்த நாள்வரைக்கும் ( 8:18)
- *இது உலகம் முழுவதுமான வெள்ளமாக இருந்ததா?* இது உலகம் முழுவதற்குமான வெள்ளமாகத்தான் இருந்தது.

**8:1-14 *பேழை அரராத் மலையை வந்தடைந்தது.***

மழை பெய்யத் தொடங்கி ஆறுமாதங்களின் பின்பு, நீர்வடியத் தொடங்கிபோது பேழை ஏழாம் மாதம்பதினேழாம் திகதி அரராத் மலைப் பகுதியில் தங்கியது இது தற்போதைய துருக்கி நாடாகும்.முதலில் காகத்தை வெளியில் விட்டார் அது போகிறதும் வருகிறதாயுமிருந்தது.பின் புறாவை அனுப்பினார் நிற்க இடமில்லாமையால் அது திரும்பிவந்தது.சில நாட்களின் பின்பு திரும்பவுமாய் புறாவை வெளியில் விட்டார், அந்தப் புறா சாயங்காலத்தில் அவனிடத்தில் வந்து சேர்ந்தது; இதோ, அது கொத்திக் கொண்டுவந்த ஒரு ஒலிவமரத்தின் இலை அதின் வாயில் இருந்தது; அதினாலே நோவா பூமியின்மேல் ஜலம் குறைந்துபோயிற்று என்று அறிந்தான்.

8:15-22 நோவா புதிய உலகத்திற்கு வந்து கர்த்தரை ஆராதனை செய்தான்.

நோவா பேழையை விட்டிறங்கி, பலிபீடத்தைக்கட்டினான், பின்பு கர்த்தருக்குப் பலிகளைச் செலுத்தினான், கர்த்தர் மீண்டும் இனி ஒரு போதும் நீரினல் உலகத்தை அழிக்கமாட்டேன் என்றுவாக்களித்தார். (9:8-17). வருங்காலத்தில் உலகம் எப்படியோ நெருப்பினால் அழிக்கப்படும். (2பேது 3:10).

**9:1-17 . புதிய ஆட்சியும் வான வில்லும்.**

உலகத்தை மீண்டும் ஜனப் பெருக்கம் ஏற்படுத்தும் வண்ணம் திரும்பவுமாய்க் கர்ரத்தர்பெருகி பூமியை நிரப்புங்கள் என்று கட்டளையுட்டார். 1:28: நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவும், உங்களுக்கு ஆகாரமாய் இருப்ப தாக; பசும் பூண்டுகளை உங்களுக்குத் தந்தது போல, அவைகள் எல்லாவற்றையும் உங்களுக்குத் தந்தேன். (9:3) வெள்ளத்திற்குமுன்பாக மாமிசம் புசிக்கப்படவில்லை. மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்க வேண்டாம். மனுஷனுடைய இரத்தத்தை சிந்துகிறது தண்டனைக்குரிய குற்றமாகும். ஏனெனில் மனுஷன் தேவசாயலாக உருவாக்கப்பட்டுள்ளான்.(9:6). நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்; அது எனக்கும் பூமிக்

கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும் அப்பொழுது எல்லா மாம்ச ஜீவன்களையும் அழிக்க இனி ஜலமானது பிரளயமாய்ப் பெருகாதபடிக்கு எனக்கும் உங்களுக்கும் மாம்சமான சகல ஜீவஜந்துக்களுக்கும் உண்டான என் உடன்படிக்கையை நினைவுகூருவேன்.(9:14-15)

**9:18-29 "கானான் சபிக்கப்பட்டவன்.**

நோவா திராட்சரசத்தைக் குடித்து, வெறிகொண்டு, தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகிப் படுத்திருந்தான். அப்பொழுது கானானுக்குத் தகப்பனாகிய காம் தன் தகப்பனுடைய நிர்வாணத்தைக் கண்டு, வெளியில் இருந்த தன் சகோதரர் இருவருக்கும் அறிவித்தான். (9:22). அப்பொழுது சேமும் யாப்பேத்தும் ஒரு வஸ்திரத்தை எடுத்துப், பின்னிட்டு வந்து, தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தை மூடினார்கள்; அவர்கள் எதிர்முகமாய்ப் போகாத படியினால், தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தைக் காணவில்லை. சேமையும் யாப்பேத்யையும் ஆசீர்வதிக்கும் போது, காமுடைய மனகாகிய கானானை நோவா சபித்தான். நோவாவின் சாபத்திற்கான காரணம் என்ன? **ஒருபால் புணர்ச்சி எற்பட்டதாக சிலர் கருதுகின்றனர்**. : எபிரேய பாஷையில் உள்ள சொல் இதனை ஏற்றுக் கொள்வதாக கருதுகிறார்கள், இது உடுப்பைக் கழைதல் என்று பொருள்படுவதாகக் கூறுகின்றார்கள். (9:22) இது லேவியராகமத்தில் **18: 20** இற்கு ஒப்பாக பாலியல் துஸ்பிரயோகத்திற்கு ஒப்பானது. கானான் பரம்பரையினர் இதில் அதிக நாட்டமுள்ளவர்கள்.

**10:1-32 நோவின் பரம்பரையினர்.**

நோவாவின் மூன்று பிள்ளைகளின் சந்ததியினரும் பட்டியலிடப்பட்டுள்ளார்கள்.

சேமுக்கும் பிள்ளைகள் பிறந்தார்கள்; அவர்கள் **ஏபேல்** சந்ததியார் என அழைக்கப்பட்டார்கள். (10:21). இவர்கள் **எபிரேயர் அல்லது இஸ்ரவேலர்கள்** என்று அழைக்கப்படுகிறார்கள்.

**11:1-9 பாபேலில் பிரச்சனைகள்**.

நோவாவின் சந்ததியினர் இரண்டு காரணங்களுக்காக பாபேல் கோபுரத்தைக்கட்டினார்கள். : தங்களுக்குப் பெயர் உண்டாக்கவும், தங்கள் பாதுகப்பை உறுதி செய்யவும். வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தைக் கட்டத்திட்டமிட்டார்கள். (11:4). ஆனால் கர்த்தர் இந்த பெரிய திட்டத்திற்கு, அவர்களின் பாஷையை விளங்காதபடிக்குசெய்தபடியால் அவர்கள் உலகம் முழுவதும் சிதறிப் போனார்கள்.

**11:10-32 விசுவாசமுள்ள தகப்பனை அறிமுகம் செய்தல்**.


பாபேல் கோபிரத்திற்குப்பின்பு எபிரேய (10:21) சந்ததியில் (11:27), ஆபிராம் அறிமுகமாகின்றார், அவர் **ஆபிரகாம்** என்று பெயர்மாற்றப்படுகின்றார். 17:5. ஆபிராம்,நேவாவிலிருந்து பத்தாவது பரம்பரையைச் சேர்ந்தவராவார். ஆபிராம் கி.மு.2165 இல் பிறந்தவர். இவருடைய சிறிபிராயம் பற்றியோ அல்லது கர்த்தரை எப்படி அறிந்தார் என்பது பற்றியோ எதுவும் தெரியாது. ஆதியாகத்தின் 12:1இல் யோசுவா 2 42இலும், அப்போ. 7:2இலும் குறிப்பிடப்பட்டதுமட்டும்தான் அவருடைய இரட்சிப்பு முற்பட்டகாலப்பகுதிகளாகும். ஆபிரகாம் ஒரு சுரூப வணகக்காரனாக இருந்திருகக் கூடும் (யோசு 24:2).. ஆபிரகாமின் நாட்களில், ஊர், என்ற கிராமம், ஒரு செல்வம் நிறைந்த வர்த்தக நிலையமாகவும்,பெர்சியன் குடாவில் , யூபிரட்டீஸ் நதியின் முகத்துவாரப்ப குதியில் அமைந்திருந்தது.இதன் வான்பரப்பு **சிக்கரப்** என்ற பாகால் தெய்வங்களின் கோபுரங்களால், பாபேல் கோபுரம் பேன்ற சூழப்பட்டிருந்தது.

**கர்த்தரும் முற்பிதாக்களும். (12–50)**
**12:1-3 . ஏழுவிதமான தீர்க்கதரிசன வாக்குறுதிகள்**.

.**கி.மு.2089** இல் கர்த்தர் ஆபிரகாமை அழைத்து ,அவருடைய தாய்நாட்டின் சுகத்தை எல்லாம் விட்டு,அவருடைய குடும்பத்தையும் கூட்டிக் கொண்டு :தான் காண்பிக்கும் தேசத்திற்குப் போகும்படி:

கேட்டுக் கொண்டார். கர்த்தர் பல வாக்குத் தத்தங்களை ஆபிரகாமுக்கு கூறியிருந்தார். சந்ததியினரின் வாக்குறிதிகள், தேசத்திற்கான வாக்குறுதிகள்,மீட்பர் பற்றிய வாக்குறுதிகள்.(ரோமர். 4:11, 16).

- ஆபிரகாம் பெரிய ஜாதிகளின் தகப்பனாகினார். *(சந்ததி);*
- அவர்களுக்காக தேசத்தைக் கர்த்தர் வாக்களித்தார். *(தேசம்);*
- ஒரு இரட்சகர் மூலமாக முழு உலகமுமே ஆசீர்வதிக்கப்படும் என்று கர்த்தர் வாக்களித்துள்ளதால், அந்த இரட்சகர் ஆபிரகாமின் சந்ததிக்கூடாகவே வருவர் என்றும் கூறப்பட்டுள்ளது.(மத். 1:1; கலா. 3:8). அதேநேரம் எல்லா ஆபிரகாமினுடைய சந்ததியாகிய இஸ்ரவேலர்கள் தேசம் ,உலகத்திற்கு ஆசீர்வாதமாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. அவர்கள் திரும்பத் திரும்ப கர்த்தருக்கு விரோதமாகச் செயற்பட்டபடியால் வாக்குத் தத்தமானது கிறிஸ்துவிற்கூடாகவே நிறைவேற்றப்படுகின்றது. (ஏசா 41:1-20; 43:8-13).




***ஆதியாகமம் 12-50.*** **புவியியல் நிலமை**

**12:4-9** ஆபிரகாம் 75வயதில் வேறுபிரிக்கப்பட்டார்.

. ஆபிரகாம் 75 வயதாக இருக்கும் போது, தன்னுடைய மனைவியாகிய சாரயுடனும், அவருடைய மருமக னாகிய லோத்துவிடனும் காரானைவிட்டு வனாந்தர யாத்திரையை கானான் நோக்கிப் பிரயாணம் செய்தா ர்கள். அங்கு வந்தவுடன், ஆபிரகாம் பலிபீடம் ஒன்றைக்கட்டினார், கர்த்தர் அவனிடத்தில் தோன்றி அந்தத்

தேசத்தைக் கொடுப்பதாக வாக்களித்தார். அதன்பிற்பாடு அவர் பெத்தேலுக்குச் சென்றார்,அதன் பொருள் கர்த்தருடையவீடு என்பதாகும்.இது இஸ்ரவேல் சரித்திரத்தில் முக்கியமான பங்கை வகிக்கின்றது.

12:10-20. **கானானில் பஞ்சமும், எகிப்தில் தேல்வியும்**.

ஆபிரகாம் கர்த்தருக்குக் கீழப்படிந்து வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தில் வாழ்ந்தான். ஆனால் அங்கு பஞ்சம் நிலவியது, அதனால் அவர் கானானைவிட்டு எகிப்திற்குச் சென்றார். பார்வோன் தன்னுடைய மனைவி யைத் திருமணம் செய்வதற்காகத் தன்னைக் கொன்றுபோடுவான் என்று பயந்து, சாராயைத் தன்னுடைய சகோதரி என்று ஆபிரகாம் கூறினார்.

இதில் கொஞ்சம் உண்மை உள்ளது. : அவள் அவருடைய ஒன்றுவிட்ட சகோதரியாவாள். (20:12). பார்வோன் சாரயைத் திருமணம் செய்வதற்குத் திட்டமிட்டார், ஆனால் அந்தத்திட்டத்திற்கு எதிராகக் கர்த்தர் அவருடைய வீட்டில் கொள்ளை நோயை அனுப்பினார்.அதனால் பார்வோன் ஆபிரகாம் தன்னை ஏமாற்றியதற்காக பார்வோன் அவரைக் கடிந்து கொண்டார். (20:1-18).

13:1-4 ஆசீர்வாதான இடமாகிய பெத்தேலுக்கு திரும்பினார்.

ஆபிரகாம் எகிப்திலிருந்து கானானுக்குத்திரும்பினார், அத்துடன் பெத்தேலிலுள்ள பலிபீடத்தில் ஆராதனை செய்தார்.

13:5-13 **நீர் நல்ல இடத்தைத் தெரிவு செய்யலாம்**.

மேய்ப்பவர்களுக்கிடையில் பிரச்சனைகள் தோன்றாமல் இருப்பதற்காக , ஆபிரகாம், லோத்துவை முதலாவதாக மேய்ச்சலுக்கான இடத்தைத் தெரிவு செய்யும்படி கூறினார்,. லோத்து, யோர்தானுக்கு அருகிலுள்ள வளமான நிலமாகிய சோதோமைத் தெரிவு செய்தார்.

13:14-18 ***பூமியின் தூளைப் போல உன் சந்ததிகள் இருக்கும்***.

எபிரோனுக்கு ஆபிரகாம் செல்வதற்குத் தயாரானபோது, , கர்த்தர் தன்னுடைய வாக்குறுதியைத் திரும்பவும் உறுதிப்படுத்தினார். ஆபிரகாமின் சந்ததி பூமியின் தூழைப்போல் இருக்கும் என்றார்.

14:1-16 அவர்கள் லோத்துவைக் கொண்டு சென்றார்கள்.

சோதோமும் அவர்களுடன் சேர்ந்த நகரங்களும் கெதர்லாகோமேரோடும் , அவர்களுடன் சேர்ந்தவர்க ளோடும் யுத்தம் செய்தபோது தோல்விகண்டார்கள். லோத்து சிறைப்பிடக்கப்பட்டுக் கொண்டு போகப் பட்டான்,ஆனால் ஆபிரகாம் கெதர்லாகோமேரோடு யுத்தம் செய்து லோத்துவை மீட்டுக் கொண்டார்.

14:17-24 ***மெல்கிசதேக்கும் பேராவும்.***

**இரண்டு ராஜாக்களின் கதை**

வெற்றிக்குப்பின்பு ஆபிரகாம் எபிரோனுக்குப் போகும் வழியில், இரண்டு அரசர்களைச் சந்தித்தார்: சாலெ மின் ராஜாவாகிய மெல்கிசேக்;மற்றும் சோதேமின் ராஜாவாகிய பேரா.,பேராவின் செல்வத்தினால் ஆபிர காம் செல்வந்தனான் என்று பேரா சொல்லாதபடிக்கு ஆபிரகாம் பேரா ராஜா கொடுத்த செல்வங்களை வாங்குவதற்கு மறுத்தான். ஆனால் அவன் மெல்கிசேக் கொடுத்த செல்வங்களைப் பெற்றுக் கொண்டான். ஆனால் தனக்குக் யுத்தத்தில் கிடைத்த சகலவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்.

**மெல்கிசேக்கும் கிறிஸ்த்துவும்**. .

மெல்கிசேதேக், ஒரு ஆசாரியன், .(14:18) அதைப்பேல் அவன் ஒரு ராஜா இது சங்கீதம் 104: 4 இல் கூறப்பட்டுள்ளது. (எபிரே 5:6-10; 7:1-22. )

• *மெல்கிசேதேக்கைப் பற்றிய இரண்டு கருத்துக்கள் கூறப்படுகின்றன. :*

» அவர் கிறிஸ்த்துவின் முன் அவதாரமான கிறிஸ்த்து வேயாகும் என்றும் கூறுகின்றார்கள். .

» அவர் எருசலேமின் ராஜா என்றும் கூறுகின்றார்கள். —மெல்கிசிதேக் என்பதன் அர்த்தம் “நீதியின் அரசன்” என்பதாகும், **சேலேம்** என்பது எருசலேமின் ஆரம்பப் பெயராகும்.

• *மெல்கிசிதேக், ஆபிரகாமுக்கு திராட்சை ரசமும், அப்பமும் கொடுத்து அவரை ஆசீர்வதித்தார் . இதுவே முதன்முதலில் கூறப்பட்டுள்ள திராட்சைரசமும், அப்பமுமாகும், இது கிறிஸ்த்துவின் மரணத்தை வெளிப்படுத்துகின்றது.*

• ***14:18 இல் ஆசாரியன் என்ற சொல் முதன்முதலாக்க் கூறப்பட்டுள்ளது.***

***பழைய ஏற்பாட்டி கூறப்பட்டுள்ள மூன்று பெரிய உத்தியோகத்தர்கள், தீர்க்கதரிசி, ஆசாரியன், அரசன்.:***

» தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்கு கர்த்தரின் பிரதிநிதியாகச் செயற்படுகின்றார்கள். (1 ராஜா18:15).

» ஆசாரியர்கள் மனிதர்களின் பிரதிநிதியாக கர்த்தருக்குமுன்பு நிற்கின்றார்கள். (.லேவி 8:1–9:24).

» அரசன், கர்த்தருக்குக் கீழ் மனிதர்களை ஆளுகை செய்கின்றார்கள். (1 சாமு. 10:1).

• *மெல்கிசிதேக்கு இவற்றில் இரண்டைச் செய்து முடித்தார். ; கிறிஸ்த்து இந்த மூன்றையும் செய்து முடிக்கின்றார்.:*

» அவர் ஒரு தீர்க்கதரிசியாக இருந்தார். (கடந்த நாள் ஊழியங்கள்., மத். 21:11; லூக் 7:16; யோவான் 1:18; 4:19; எபிரே 1:1-2).

» அவர் ஒரு ஆசாரியனாக இருக்கின்றார்.(தற்கால ஊழியம், .ரோமர் 8:34; எபி. 4:14-16; 7:24-27).

» அவர் ஒரு அரசனாக வருவார்.(எதிர்கால ஊழியம், வெளி. 19:11-16). எபிரே 7:1-28.

**15:1-11 . விசுவாசிப்பது நீதியாக எண்ணப்படும்.**

ஆபிரகாம் தனக்கு பிள்ளை இல்லாதிருந்த போது, கர்த்தரிடம் தன்னுடைய வேலைக்காரனாகிய எலியேசர் தன்னுடைய சுதந்திரவாளியா என விசாரித்தான்,அதற்கு கர்த்தர் இல்லை என்று கூறி,சாராய் உண்மையில் குழந்தை பெற்றெடுப்பாள் என்று கூறினார், ” (15:6). அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்.

கர்த்தர் தன்னுடைய வாக்குத்தத்தத்தை இரத்த உடன்படிக்கைக்கூடாக ஆபிரகாமுக்குப் புதுப்பித்தார். . வேதாகமத்திலுள்ள மூன்றுவிதமான உடன்படிக்கையில் இரத்த உடன்படிக்கையும் ஒன்றாகும்.

மற்றய உடன்படிக்கைகள் உப்பின் உடன்படிக்கையும், (லேவி. 2:11-16; 2 நாளா. 13:5) பாதரட்சையின் உடன்படிக்கையுமாகும். (ரூத் 4:7-8).

**எல்லா விசுவாசிகளுக்குமான முக்கிய வசனம்**

• கர்த்தரை விசுவாசிப்பதில் ஆபிரகாம் முதலாவது மனிதனல்ல, ஆனால் அவருடைய நம்பிக்கை எல்லாவிசுவாசிகளுக்குமான மாதிரியாக இருக்கின்றன. (ரோம 4; கலா. 3:6-9; எபி. 11:8-10, 17-19).

- ஆபிரகாம் இலகுவாக கர்த்தரை நம்பினான்..

**மூன்றுவிதமான உட்புகுத்தல் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது**.

- ஆதாமின் பாவம் சகல மனிதர்களுக்குள்ளும் உட்புகுத்தப்படல்.(ரோ. 3:23; 5:12).
- எல்லாமனிதர்களுடைய பாவமும் கிறிஸ்த்துவுக்குள் உட்புகுத்தப்பட்டது. (ஏசா 53:5-6; 2கொரி. 5:14-21; எபிரே 2:9; 1 பேது. 2:24).
- கர்த்தரை விசுவாசிக்கும் பாவிகள் மீது கர்த்தருடைய நீதி உட்புகுத்தப்படல்.(ரோ. 4:6-25; பிலி. 3:9; யாக் 2:23).

**. நீதிச் செயற்பாடுகள்**.

எல்லாப்பாவிகளும் கர்த்தருக்கு முன்பாக நிர்வாணமானவர்கள். (3:7-10; எபி. 4:13; வெளி. 3:17).இதனைச் சிலர் உணர்ந்து தங்களுக்குரிய ஆவிக்குரிய உடையைத் தரித்துக் கொள்ள முயற்சிக்கின்றார்கள்., ஆனால் கர்த்தரோ அவ்வகையான உடைகளை அழுக்கான கந்தைகள் எனக் கூறுகின்றார். ” (ஏசா 64:6). பாவிகள் தாங்கள் நிர்வாணமானவர்கள் என்று உணர்ந்து கர்த்தர் பக்கமாகத் திரும்புதல் வேண்டும், அப்போது கர்த்தர் தன்னுடைய நீதியின் வஸ்த்திரத்தினால் உன்னை மூடுவார். (ஏசா. 61:10; சகரி. 3:4; லூக் 15:22).

**15:12-21 நான்கு நூற்றாண்டுகளாக அடிமைத்தனம். பின்பு கானான்**.

கர்த்தர் ஆபிரகாமுக்குப் பல தீர்க்கதரிசனங்களைக் கூறினார், அவைகள் யாவும் நிறைவேற்றப்பட்டன. .

அவை நிறைவேற்றப்பட்ட குறிப்புக்களைப் பார்ப்போம். :.

- ஆபிரகாமின் சந்ததியினல் அந்நிய தேசத்தில் அந்நியர்களாய் இருப்பார்கள் (46:2-4).
- அந்தத் தேசத்தில் வேலைக்கார்ராக இருப்பார்கள்.(யாத். 1:7-14).
- அடிமைத்தனம் 430 வருடங்கள் நீடிக்கும்.(யாத். 12:40).
- கர்த்தர், அடிமைப்படுத்தின அந்தத் தேசத்தை நியாயம் தீர்ப்பார். (யாத். 7–12).
- ஆபிரகாம் இவை யாவற்றிலுமிருந்து விடுவிக்கப்படுவார். (25:7-8).
- எகிப்தில் நான்கு தலைமுறைக்குப் பின்பு, இஸ்ரவேல் கானானுக்குத் திரும்பினார்கள். (யாத் 6:16-20—).
- இஸ்ரவேலர்கள் பெரும் செல்வங்களோடு எகிப்திலிருந்து வெளியே வந்தார்கள். (யாத் 12:35-36; சங் 105:37).

**16:1-16 .*திருமணம் சொர்க்கத்தில் நிச்சயமாக நியமிக்கப்படுவதில்லை*.**

கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை நம்பாமல், பிள்ளை பெறாத சாராய் தன்னுடைய வேலைக்காரியை ஆபிரகாமுக்குப் பிள்ளை பெற்றுத்தரும் நோக்த்திற்காக கொடுக்கின்றாள்.ஆகாருக்குக் குழந்தை உருவாகியவுடன், எப்படியோ சாராயின் மனப்போக்கு மாறியது, ஆகாரை அவள் துரத்திவிட்டாள். கர்த்தருடைய தூதன் ஆகாரை நீரூற்றண்டையில் கண்டு, பிறக்காத பிள்ளைக்குப் பெயரிட்டு, திரும்பவுமாய் அவளை சாராய் அண்டைக்கு அனுபப்பட்டாள். வேதாகம ஆராய்ச்சியாளர்கள் ‘கர்த்தருடைய தூதன் என்பது, இயேசுக்கிறிஸ்த்துவின் முன் அவதாரம் என்றே கூறுகின்றார்கள்.சில தோற்றங்கள் பிதாவாகிய கர்த்தருடையது என்றும் கூறுகின்றார்கள். (17:1-8).ஆகார் வீட்டுக்குத் திரும்பி இஸ்மவேலைப் பெற்றெடுத்தாள். அப்போது ஆபிரகாமுக்கு 86 வயதாக இருந்தது.

**17:1-8** ***99ஆவது வயதில் பெயர் மாற்றப்பட்டுள்ளது.***

ஆபிராம் என்பதன் பொருள் மேன்மையான தகப்பன் என்பதாகும், ஆபிரகாம் என்பதன் பொருள் பல தேசங்களின் தகப்பனாகும். நான்காவது முறையாக கர்த்தர் ஆபிரகாமுடைய உடன்படிக்கையை உறுதிப் படுத்தினான். (12:2-3, 7; 13:14-17; 15:5)ஆபிரகாமுக்கு கர்த்தர் தோற்றமளிப்பது " தியோப்பனி" என்பதற்கான உதாரணமாகும். தன்னைக் கண்டு ஒருவரும் உயிர்ரோடு இருக்க முடியாது என்று மோசேக்கு கூறியிருந்த போதிலும் காணப்படாத கர்த்தர் காணப்படக்கூடியதாக தோற்றமளித்தார். (.யாத் 33:20),சிலசமயங்களில் தன்னுடைய பல தோற்றங்களில் சிலவற்றை ஒரு நொடியில் விசுவாசிகள் பார்ப்பதற்கு அனுமதிக் கின்றார். (18:2; யாத் 24:9-18; 33:18-23; நியா 13:17-23; எசேக். 1:26-28). சிலவேளைகளில் இந்த தியொப்பனி கர்த்தருடைய தூதன் என்று கூறப்படுகிறது. (16:1-16). கர்த்தர் தன்னைத் தானே வெளிப்படுத்தியது இயேசுக்கிறிஸ்த்து என்ற தோரணையிலாகும். (யோவான் 1:14).

**17:9-14** . **விருத்சேதனம் உடன்படிக்கையின் அடையாளமாகும்**.

கர்த்தர், அபிரகாமுக்கு அவனது வீட்டிலுள்ள ஆண்பிள்ளைகள் யாவரும் விருத்த சேதனம் செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டார்.

விருத்த சேதனம் பற்றிய விடயங்கள்:

- விருத்தசேதனம் செய்யப்பட்ட முதல் மனிதன் ஆபிரகாம் ஆகும்..
- விருத்தசேதனம் கர்த்தருடைய வாக்குறுதிகளுக்கான ஊடகம் அல்ல, ஆனால் அது ஒரு அடையாளமாகும். : கர்த்தருடைய வார்த்தையில் நம்பிக்கைவைப்பது ஒரு ஆதாரமாகும். (15:6;ரோம. 4:1-12).
- இருதயத்தில் சுத்தமில்லாமல் விருத்தசேதனம் செய்வது பிரயோசனமற்றதாகும். (உபோ. 10:16).
- புதிய உடன்படிக்கையாகிய கிருபையின் காலத்தில் விருத்தசேதனம் **தேவையில்லை.** (அப்15:1-2, 28-29; ரோ. 4:1-12; கலாத் 5:2-6).
- பரிசுத்த பவுல் விருத்த சேதனத்தை திருமுழுக்குடன் ஒப்பிடுகின்றார். (கொலோ 2:11-12).
- சுகாதார அவசியத்திற்காக விருத்தசேதனம் பரிந்துரை செய்யப்படுகின்றது.

**17:15-22** . ஒரு மகன் வாக்குப் பண்ணப்பட்டு , 90 வயதில் பெயர் மாற்றப்பட்டார்.

கர்த்தர் சாரய் என்ற பெயரை சாராள் என்று மாற்றி அவள் ஒழு குழந்தையைப் பெறுவாள் என்று கூறினார். ( குழந்தைக்கு ஈசாக்கு என்று பெயரிடப்பட்டது) அவள் ஜாதிகளுக்கெல்லாம் தாயானாள்.

**17:23-27** . ஆபிரகாம் உடன்படிக்கையை முத்திரையிட்டான்.

ஆபிரகாம், இப்போது 99 வயது கர்த்தருடைய கட்டளையை நிறைவேற்றினார்.ஆதி 17:9-14 அவரும் அவருடைய கூடாரத்திலிருந்த ஆண்மக்கள் யாவரும் விருத்த சேதனம் செய்தார்கள்.விருத்த சேதனத்தின் இன்னொரு பொருள் எங்கள் சுய பெலத்திலில்லை என்பதாகும்.

**18:1-15** **ஈசாக்கு**

**நற்செய்தி**

திரும்பவும் ஒரு முறை கர்த்தர் ஆபிரகாமுக்குத் தோன்றினார்', ஆபிரகாம் தன்னிடத்தில் விஜயம் செய்த தெய்வீகமானவருக்கும் அவருடன் வந்த இரண்டு கர்த்தருடைய தூதர்களுக்கும், உணவுதயாரித்தார். கர்த்தர், இந்த வருடத்தில் சாராளுக்கு குழந்தை கிடைக்கும் என்று கூறினார். சாராள் இதைக் கேட்டு நகைத்தாள். கர்த்தர் அதற்காக அவளைக் கடிந்து கொண்டார். சாராள் தான் நகைக்கவில்லை என்று கூறி நகைத்தாள்.

**18:16-33** ***சோதோம்.***

**கெட்ட செய்தி.**

சோதோம் கொமோராவை அழிக்கப் போவதாக ஆபிரகாமுக்கு கர்த்தர் கூறினார்.ஆபிரகாம் லோத்துவுக்காக பரிந்து பேசினார். லோத்துவின் சொந்த ஊரான சோதோமை அழிக்காமல் இருப்பதற்கு 10 நீதிமான்கள் இருபார்களாகில் அதனை அழிப்பதில்லை என்று கர்த்தர் ஒத்துக் கொண்டார்,

**19:1-11** சோதோமின் பாவிகளும்,ஒரு பின்மாற்றமான விசுவாசியும்.

சோதோமுக்கு இரண்டு தூதர்கள் வந்த போது,, லோத்து அவர்களை வரவேற்று சோதோமின் கெட்ட குடிமக்களிடமிருந்து பாதுகாக்க வீட்டுக்கு அழைத்தான். லோத்துவின் வீடு சோதோமியர்களால் சூழப் பட்டது, அவர்கள் அங்கு வந்த இரண்டு தூதர்களை பாலியல் தேவைக்காக தங்களிடம் அனுப்பி வைக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். . லோத்து தன்னுடைய புருஷனை அறியாத பிள்ளை களைத் தருகின்றேன் என்று அவர்களுடன் விவாதம் பண்ணிக் கொண்டிருந்தார். ..

**லோத்துவின் அழைப்பைக் கவனிப்போம்.**

- முதலில், அவர் சோதோமை ஆவலுடன் பார்த்தார்.(13:10).
- பின்பு அவர் சோதோமுக்கு அருகிலுள்ள இடத்தைத் தெரிவு செய்தார். (13:11).
- அடுத்து அவருடைய கூடாரத்தை சோதோமை நோக்கிக் கொண்டுவந்தார். (13:12).
- பின்பு அவர் நகரத்திற்குள் பிரவேசித்தார். (14:12).
- இறுதியாக அவர் தன் முழுச் சக்தியையும் பிரயோகித்தார்(19:1-11) பின்பு அவர் தன்னுடைய பெண்பிள்ளைகளையும் சோதேமுக்கு கொடுத்தார். (19:8, 12-14, 30-38)

*சோதோம் அழிக்கப்படும் போது பின்னிட்டுப்பார்த்து உப்புத்தூணாகிய லோத்தின் மனைவி. மனந்திரும்பியபின் தேவனோடே வாழப்பிரியப்பட வேண்டும்.*

**19:30-38** ***தன்னுடைய பெண்பிள்ளைகளால் இரண்டு மகன்மாரைப் பெற்றுக் கொண்டான்.***

தன்னுடைய தகப்பனின் பெயரைப்பாதுகாப்பதற்கு கணவன்மார் இல்லாதபடியால்,லோத்துவின் இரண்டு மகள்மாரும் , தங்களுடைய தகப்பனுக்கு மதுவைக் குடிக்கக் கொடுத்து, அவருடன் உடல் உறவு வைத்து குழந்தையைப் பெற்றுக் கொண்டார்கள். அவர்களுடைய சந்ததியினர், மோவாப்பியரும், அம்மோனியர் களுமான இஸ்ரவேலர்களின் எதிரிகளாவார்கள்.

**20:1-18** ***அவள் என்னுடைய சகோதரியாவாள் என்று திரும்பவும் அவன் கூறினார்.***

பெலிஸ்தர்களின் எல்லைக்குள் செல்லும் போது, ஆபிரகாம் தன்னுடைய மனைவியாகிய சாராயைத் தனது சகோதரி என்று அபிமலேக் அரசனுக்கு அறிமுகப்படுத்தினார், ஆனால் கர்த்தர் அவளுடன் உடலுறவு வைக் காதபடி எச்சரித்தார். இது ஆபிரகாம் சாராயைப் பற்றி பொய் கூறியது இரண்டாவது முறையாகும்.(12:10-20),

ஏனெனில் சாராயைத் தனக்கு மனைவியாக எடுப்பதற்காகத் தன்னைக் கொலை செய்துவிடுவார்கள் என்ற பயத்தினாலாகும். ஆபிரகாமுடைய மனைவியாகிய சாராளின் நிமித்தம் கர்த்தர் அபிமெலேக்குடைய வீட்டாரின் கர்ப்பங்களையெல்லாம் அடைத்தார். அபிமலேக்கு உண்மையாக நடந்து கொண்டான் என்று ஆபிரகாம் அறிந்து (20:18). தேவனை நோக்கி வேண்டிக்கொண்டான்; அப்பொழுது தேவன் அபிமெலேக்கையும், அவன் மனைவியையும், அவன் வேலைக்காரிகளையும் குணமாக்கி, பிள்ளைபெறும்படி அநுக்கிரகம் பண்ணினார்.

**21:1-7 சிரிப்பவரின் (ஈசாக்கின்) பிறப்பு**

சாராள் ஈசாக்கைப் பெற்றெடுத்தாள், ஈசாக்கு என்பதன் அர்த்தம் "சிரிப்பவன்" என்பதாகும் இயல்பாக குழந்தை பிறந்ததையிட்டு தாயும் தாகப்புமாகிய இருவரும் சந்தோஷப்பட்டார்கள். , அப்பொழுது சாராள்: தேவன் என்னை நகைக்கப்பண்ணினார்; இதைக் கேட்கிற யாவரும் என்னோடேகூட நகைப்பார்கள் என்றாள். (21:6).

கர்த்தரின் ஈடுபாட்டில் பிறந்த 11 பிறப்புக்கள் வேதாகமத்தில் பதியப்பட்டுள்ளன. :

1. யாக்கோபு, ஏசா (25:21);
2. றூபன்(29:31);
3. இசக்கார்(30:17-18);
4. யோசேப்பு (30:22-24);
5. சிம்சோன் (நியாய. 13:2-5);
6. ஓபேத்(ரூத் 4:13);
7. சாமுவேல்(1 சாமு. 1:19-20);
8. சூனேமியாளுக்குப் பிறந்த மகன்(2 ராஜா 4:14-17);
9. யோவான் ஸ்நானகன்(லூக் 1:5-13, 57);
10. இயேசு(லூக் 1:26-38; 2:7).

**21:8-21** . ***சாராளும் ஆகாரும்,***

**கூடாரத்தினுள் அதிக பிரச்சனைகள்.**

ஈசாக்கு பால் மறந்தநாளிலே ஆபிரகாம் பெரிய விருந்துபண்ணினான் பின்பு இஸ்மவேல் சாராளுடைய மகனை அடிப்பதைக் கண்டு ஆத்திரமடைந்து, ஆகாரையும், அவள்பெற்ற பிள்ளையாகிய இஸ்மவேலையும் வனாந்தரத்திற்கு அனுப்பும்படி வேண்டிக் கொண்டாள். ஒரு தூதனுக்கூடாக கர்த்தர் ஆகாரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தினார்.பரிசுத்த பவுல் ஆகாருக்கும், சாராளுக்கும் ஏற்பட்ட பிரச்சனையை நியாப்பிரமாணத்துக்கும், கிருபைக்கும் உள்ள தொடர்பை இணைத்து விபரித்தார். (கலாத். 4:21-31).

**21:22-34** .***ஏழு ஆட்டுக்குட்டிகளால் உடன்படிக்கை முத்திரையிடப்பட்டது***.

ஆபிரகாமுடன் கர்த்தர் இருப்பதைக் கண்டு, அபிமலேக்கு ஆபிரகாமுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டான். . ஆபிரகாம் அதை எற்றுக்கொண்டு, ஏழு ஆட்டுக்குட்டிகளால் அதனை முத்திரையிட்டான்.. (இதைப் போன்றதொரு உடன்படிக்கை 26:17-33, ஈசாக்கு பெலிஸ்தியர்களுடன் ஏற்படுத்தினான்..)

**22:1-24** ***பலி பீடத்தின்மீது ஈசாக்கு.***

**கல்வாரிக்குச் சமீபமாக.**

கர்த்தர் ஈசாக்கைப் பலியிடுமாறு ஆபிரகாமுக்கு கட்டளையிட்டார். . ஆபிரகாம் பலிபீடத்தின்மீது ஈசாக்கைக் கட்டிப் போட்டான் ஆனால் கடைசி நேரத்தில் ஈசாக்கின் கட்டுக்களை அவிழ்த்துவிடும்படி, கர்த்தர் அற்புத மாக ஈசாக்கின் இடத்திற்குப் பலியிடுவதற்காக ஒரு ஆட்டுக்குட்டியை ஆயத்தப்படுத்தினார். . ஈசாக்கைப் பலியிடுவதற்கு ஆபிரகாம் சம்மதித்த படியால், அவனை திரும்பவும் ஆசீர்வதிப்பதாக வாக்குப் பண்ணினார் (22:15-19).

பலிசெலுத்தும் நேரம் வந்தபோது,ஆட்டுக்குட்டி எங்கே என்று ஈசாக்கு கேட்டான். கர்த்தர் ஆட்டுக்குட்டியை தருவார் மகனே என்று ஆபிரகாம் பதிலளித்தான். (22:8). வேதாகமத்தின் முக்கிய செய்தியானது இந்த ஒரு வார்த்தைக்குள் அடங்குகின்றது.—கர்த்தர் தன்னுடைய ஒரேபேறான குமாரனையே பாவத்திற்குப் **பலியாகத் தருவார் என்பதேயாகும்**.:

- **ஆட்டுக்குட்டி எங்கே?** (22:7)
- அங்கேபார் தேவ ஆட்டுக்குட்டியை (யோவான் 1:29)
- அந்த ஆட்டுக்குட்டியே பாத்திரர். (வெளி. 5:12)

**23:1-20** ***சாராள் மரணமடைந்தாள்***.

ஆபிரகாம் அடக்கம் செய்தான்.

சாராள் 127வது வயதில் மரணமடைந்தாள், ஆபிரகாம் துக்கம் கொண்டாடினான். ஆபிரகாம் தன் மனைவி யாகிய சாராளைக் கானான் தேசத்தில் எப்ரோன் ஊர் பூமியான மம்ரேக்கு எதிரே இருக்கிற மக்பேலா என்னும் நிலத்தின் குகையிலே அடக்கம்பண்ணினான். (23:19), ஆபிரகாம் (25:9), ஈசாக்கு,ரெபேக்கா,லேயாள் (49:31), யாக் கோபு(50:13) என்பவர்களும் அந்தக் குகையிலே அடக்கம் பண்ணப்பட்டார்கள்.. 23:2 இல் முதன் முதலில் வேதாகமத்தில் புலம்பி அழுதல் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இறுதியாக வெளிப்படுத்தல் 5:4இல் கூறப்பட் டுள்ளது. ஆனால் ஒருநாளில் அழுகை எல்லாம் நின்று போகும். (வெளி. 21:4).

**24:1-56** ***மணவாட்டியைக் கூட்டி வருதல்***.

ஆபிரகாம் தனக்கு மிகவும் நம்பிக்கையான ஊழியக்காரனை தன்னுடைய மகனாகிய ஈசாக்கிற்கு பெண் கொள்ளும்படி மெசமத்தோமியாவுக்கு அனுப்பினான். அந்த ஊழியக்காரன், மெசமத்தோமியாவில் வைத்துக் கர்த்தரிடம் பெண்ணைத் தெரிவு செய்வதற்கான அடையாளத்தைக் காண்பிக்கும்படி கேட்டுக்கொண்டான். சரியான அந்த நேரத்திலே ரெபேக்காள் அந்த இடத்திற்குச் சமீபமளித்தாள். அந்தச் சேவகன் தான்வந்த நோக்கத்தையும், கர்த்தர் தனக்கு உதவி செய்து ரெபேக்காளை ஈசாக்கிற்காக தெரிவு செய்த விதத்தையும் ரெபேக்காளிடம் கூறினான்.

**24:57-67** ***மணப்பெண் மணமகனிடம் செல்வதற்கு ஒத்துக் கொண்டான்***.

அந்தச் சேவகன் முன்வைத்த திருமண ஆலோசனைக்கு ரெபேக்காள் ஒத்துக் கொண்டாள். , குடும்பத் தாருக்குப் பிரியாவிடை கூறிய பின்பு அந்தச் சேவகனுடன் கானான் தேசத்திற்குச் சென்று ஈசாக்கை மணந்து கொண்டாள்.

**25:1-6 அவருடைய மூன்றாவது மனைவிக்கூடாக ஆறு ஆண்பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டார்**.


சாராளுடைய மரணத்திற்குப்பின்பு ஆபிரகாம் கேத்தூராள் என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரீயையும் விவாகம்பண்ணியிருந்தான் ,அவள் ஆறு ஆண்பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள்.. நான்காவது மகள் மீதியானாகும் அவர் மீதியானியர்களின் தகப்பனாராகும். சில நூற்றாண்டுகளுக்குப்பின்பு மோசே

மீதியானியப் பெண்ணை மணந்து கொண்டார். (யாத். 2:16-21). மீதியானியர்கள் இன்றும் இஸ்ரவேலுக்கு எதிராக உள்ளனர். (நியாயா 6–8).

**25:7-11 விசுவாசத்தின் தந்தைக்கு பிரியாவிடை.**

ஆபிரகாம் 175 வயதில் மரணமடைந்தார். சாராளுடன் இணைந்து ஈசாக்கும் இஸ்மவேலும் அவரை மக்பேலாவில் அடக்கம் பண்ணினார்கள்.

**ஆபிரகாமின் காலத்தின் முக்கிய இடங்கள்.**



**ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு ஆகியவர்களின் கதைகளில் வரும் முக்கிய இடங்கள்.**




**25:12-18** .***அராபியர்களின் தகப்பனாரான இஸ்மவேல் மரித்தார்.***

**இஸ்மவேல் 12 மகன்மாருக்குத் தகப்பனானார்.**

அவர்கள் 12 கோத்திரங்களை உருவாக்கினார்கள். அவர் 137 வது வயதில் மரணமடைந்தார். இன்றைய அராபியர்கள் இஸ்மவேல் தங்களின் மூதாதையர் என்று எண்ணுகிறார்கள்.

**25:19-26** ***யாக்கோபு, ஏசா:***

***ஒரு பிறந்தநாள், இரண்டு தேசங்கள்.***

ஈசாக்கும்,ரெபேக்காளும் 20 வருடங்களாக குழந்தை இல்லாமல் இருந்தார்கள. . ஈசாக்கு கர்த்தரிடத்தில் வேண்டிக் கொண்டான்,ரெபோக்காள் இரணைப்பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள். . அதற்குக் கர்த்தர்: இரண்டு ஜாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டாயிருக்கிறது; இரண்டு வித ஜனங்கள் உன் வயிற்றிலிருந்து பிரியும், அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப் பார்க்கிலும் பலத்திருப்பார்கள், மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்றார். மூத்தவன் சிவந்த நிறமுள்ளவனாயும் சர்வாங்கமும் ரோம அங்கி போர்த்தவன் போலவும் வெளிப்பட்டான்; அவனுக்கு ஏசா என்று பேரிட்டார்கள். பின்பு, அவன் சகோதரன் தன் கையினாலே ஏசாவின் குதிங்காலைப் பிடித்துக்கொண்டு வெளிப்பட்டான்; அவனுக்கு யாக்கோபு என்று பேரிட்டார்கள்; இவர்களை அவள் பெற்ற போது ஈசாக்கு அறுபது வயதாயிருந்தான். 25:23–26 இங்கு ஒரு கொள்கை அறிமுகப்படுத்தப்படுகின்றது,அது இஸ்ரவேல் சரித்திரத்தில் திரும்பத்திரும்ப நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது.

**25:27-34** **சேஷ்ட புத்திரபாகம்** ***கூழுக்காக விற்கப்படல்.***

ஏசா வேட்டைக்காரனாகினான், யாக்கேபு வீட்டோடு இருந்தான்.. ஒருநாள் ஏசா வேட்டையிலிருந்து வரும்போது மிகவும் களைத்தவனாக வந்தான்,,அதனால் ஒருகேப்பை கூழுக்காக தன்னுடைய **சேஷ்ட புத்திரபாகத்தை** விற்றுப்போட்டான். வழமையின்படி **சேஷ்ட புத்திரபாகம்** மூத்தமகனுக்கே உரியது, தகப்பனின் சுதந்திரத்தில் இரண்டுமடங்கு அவருக்குரியது..அவர் அதனை விற்றுப் போட்டபடியால் அந்தச் சுதந்திரம் குடும்பத்தில் சமபங்காக மாற்றப்பட்டது. .

**26:1-35** ***ஈசாக்கும் பெலஸ்தீனியர்களும்.***

**தகப்பனைப் போல மகன்.**

பஞ்சகாலத்தில் கர்த்தர் ஈசாக்கிற்கு ஆபிரகாமுக்கு வாக்களித்துபோல ஈசாக்குக்கும் வாக்களித்தார். பஞ்சம் வந்தபோது ஈசாக்கு பெலஸ்தீனிய ராஜாவாகிய அபிமெலேக்கினிடத்திற்குச் சென்றான்.. ஈசாக்கு ,ரெபோக்கா தன்னுடைய சகோதரி என்று பொய்சொன்னான். . சில நாட்களுக்குப்பின்பு உண்மை தெரிய வந்தது. இந்த அபிமலேக்கு ஆபிரகாம் பொய் சொன்ன அபிபிமலேக்குவின் மகனாகும். (20:1-18). தன் தகப்பனாகிய ஆபிரகாமின் நாட்களில் வெட்டினவைகளும், ஆபிரகாம் மரித்தபின் பெலிஸ்தர் தூர்த்துப் போட்டவை களுமான துரவுகளை மறுபடியும் தோண்டி, தன் தகப்பன் அவைகளுக்கு இட்டிருந்த பெயர்களின் படியே அவைகளுக்குப்பெயரிட்டான். (26:17-33). ஈசாக்கோடு கர்த்தர் இருப்பதைக்கண்ட பெலிஸ்தர்கள், அவருடன் ஒரு உடன்படிக்கையை மேற் கொண்டார்கள். ( இதைப்போன்ற ஒரு ஒப்பந்த்த்தை ஆபிரகா மும்பெலிஸ்தருடன் செய்திருந்தார். 21:22-34,) இந்தநேரத்தில் ஏசா கானானியப் பெண்களைத் திருமணம் செய்து, ஈசாக்கிற்கும் ரெபேக்காவிற்கும் மனநோவை ஏற்படுத்தினார்.

**27:1-29** ***யாக்கோபு, ஆசீர்வாதம்:***

**சரியான நோக்கம்,** ***தவறான வழி***

ஈசாக்கு தன்னுடைய 137 வது வயதில், தான் விரைவில் மரித்துவிடப்போவதாக உணர்ந்து, தனக்காக ஒரு நல்ல உணவை ஆயத்தம் செய்யும்படி ஏசாவுக்குக் கட்டளையிட்டார்,,இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஏசாவை ஆசீர்வதிக்கவும் தீர்மானித்தார். இதை அறிந்த ரெபோக்கா ஏசாவைப்போல் உடையணிந்து தகப்ப னின் ஆசீர்வாத்த்தை யாக்கோபு பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்தாள். இந்த ஏமாற்றுதிட்டம் வாய்த்து.

யாக்கோபு ஆசீர்வாத்த்தை பெற்றுக் கொண்டார். ரெபேக்காள் சரியாக உணர்ந்து கர்த்தருடைய திட்டத்தை நிறைவேற்றினாள். (25:23),ஆனாலும் அவள் மேற் கொண்ட வழி தவறானது போல் தெரிகிறது.

**27:30-46** ***ஏமாற்றுக்காரனை கொலை செய்வதற்கான, ஏசா பழிவாங்கும் பொருத்தனை செய்தான். :***

ஏசாவினுடைய ஆசீர்வாதங்களை யாக்கோபு பெற்றுச் சென்ற சில நொடிகளில் ஏசா அங்கு வந்தான்.. ஏமாற்று திட்டம் கண்டுபிடக்கப்பட்டது, ஆனால் அது தாமதமாகிவிட்டது. :அந்த ஆசீர்வாத்த்தை தள்ளிவிட முடியாது, ஈசாக்கு தன்னிடத்திலுள் சில எஞ்சியுள்ள ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை மட்டும் கொடுக்க முடியும். ஏசா, யாக்கோபைக் கொலை செய்யப் பொருத்தனை செய்தான். இதனை அறிந்து ரெபேக்கா தன்னுடைய சகோதரனாகிய லாபானிடம் மெசமத்தோமியாவுக்கு அனுப்பினாள்.

**28:1-5** ***ஏமாற்றுக் காரனாகிய ஆசீர்வாதம் பெற்ற யாக்கோபு ஓடினான் .***

ஏசாவின் கோபத்திலிருந்து பாதுகாப்பதற்காக யாக்கோபு தூரதேசத்திற்கு அனுப்பப்பட்டான்.

**28:6-9 இது அவர்களைச் சந்தோஷப்படுத்தும்.**

பாகால் வணக்ககார பெண்களைத்திருமணம் செய்தபடியால்பெற்றோர் கவலையாக இருந்தபடியால், அவர்களின் கவலையைப் போக்குவதற்கு இஸ்மவேலின் குமாரத்தியாகிய மகலாத்தை ஏசா விவாகம் செய்தான்.

**28:10-22 .*யாக்கோபு, பரலோக ஏணியும்..***

யாக்கோபு, காரானுக்குப் போகும் வழியில் தங்கினான், அங்கே அவன் ஒரு சொப்பனங் கண்டான்; இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது, அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது, அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள்.. ஆபிரகாமின் உடன்படிக்கையை மீண்டும் உறுதிப்படுத்துவதற்காகவே கர்த்தர் இந்ததரிசனத்தைக் கொடுத்தார். . அதிகாலையிலே யாக்கோபு எழுந்து, தன் தலையின்கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தி, அதின்மேல் எண்ணெய் வார்த்து, என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பிவரப்பண்ணுவாரானால், கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார் என்று பொருத்தனை பண்ணினான்.(28: 21)

**29:1-14 . துரவண்டையில் நிற்கும் பெண்ணே தன்னுடைய மனைவி.**

காரானுக்கு வந்தபோது, துரவை மூடியிருக்கும் பெரிய கல்லை ஒருபுறம் தள்ளிவிட்டு, தன் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டினான்.. அந்த மந்தைகளின் காவலாளி தன்னுடைய மச்சாள் ராகேல் என்று பின்பு அறிந்து கொண்டான். . பிற்பாடு அவன் லாபானைச் சந்தித்தான், அவர் அவனுடைய மாமனாராகும், அத்துடன் எதிர்கால மனைவியின் தகப்பனாருமாகும். (24:10-28; யாக். 2:15-21).

**29:15-30** ***அவன் ஒரு மனைவிக்காக வேலை செய்து இரண்டைப் பெற்றுக் கொண்டான்..***

ராகாலுக்காக ஏழுவருடம் லாபானிடத்தில் வேலைசெய்வதற்கு யாக்கோபு சம்மதித்தான். . யாக்கோபு திருமணம்முடித்த அடுத்தநாள் காலையில், தான் ராகேலுடைய சகோதரி லேயாளைத் தனக்கு திருமணம் முடித்துவைத்ததை அவதானித்தான்.

அதனால் மாமனாருடன் வாக்குவாதப்பட்டான். அதன்பிற்பாடு திரும்பவும் ஏழுவருடம் ராகேலுக்காக வேலை செய்தான்.

**29:31–30:8** ***யாக்கோபின் முதல் ஆறு மகன்கள்.***

யாக்கோபின் முதல் நான்கு ஆண்பிள்ளைகளையும் லேகா பெற்றெடுத்தாள். :ரூபன், சிமியோன்,லேவி, யூதா . பிள்ளைகள் இல்லாத ராகேல் ,தன்னுடைய வேலைக்காரியாகிய பில்லாவை குழந்தை பெற்றுக் கொள்வதற்கு யாக்கோபுவுக்கு கொடுத்தாள். , அவளுக்கூடாக தான், நப்தலி என்னும் இரண்டுபிள்ளைகள் பிறந்தார்கள்.

**30:9-13** ***ஏழாவதும் எட்டாவதுமான மகன்கள்.***

லேகா தற்காலிகமாக மலடியாக இருந்தாள்.தன்னுடைய வேலைக்காரியாகிய சில்பா என்பவளை குழந்தை பெறுவதற்காக யாக்கோபுக்குக் கொடுத்தாள், அவள் மூலம் காத், ஆசேர் என்னும் இரண்டு பிள்ளைகள் கிடைத்தார்கள்.

**30:14-21 ஒன்பதாவதும் பத்தாவதும் மகன்களும் ஒரு மகளும்.**

லேயாள் ,யாக்கோபுக்கு இசக்கார், செபுலோன் என்னும் ஆண்மக்களையும் தீனாள் என்னும் பெண்பிள்ளையையும் பெற்றாள்.

**30:22-24** ***ராகேல் கடைசியில் கனம்பண்ணப்பட்டாள். :***

***பதினோராவது மகன்.***

ராகேல் இறுதியில் ஒருமகனைப் பெற்று **யோசேப்பு** என்று பெயரிட்டாள். அதற்குப்பிற்பாடு பென்ஜமின் என்ற மகனையும் பெற்றாள்.(35:18), இவர்கள் யாக்கோபினால் அதிகம் நேசிக்கப்பட்டார்கள். . யாக்கோபின் அரைவாசிப்பகுதிப் பிள்ளைகள் திருமணம் செய்ய விருப்பம் இல்லாதிருந்த லேயாள் பெற்றெடுத்தாள். இவர்களுள் ஆசாரியர்களுக்கெல்லாம் தகப்பனாகிய லேவியும், ராஜாக்களின் மூதாதையரும், கிறிஸ்துவின் பரம்பரையாகிய யூதாவும் அடங்கும்.

**30:25-43** ***லாபானின் வேண்டுதல். : உன்னுடைய சம்பளத்தைக் கூறு***

யோசெப்பு பிறந்த பிற்பாடு யாக்கோபு கானானுக்குப் போவதற்குத் தீர்மானித்தான்.. லாபான் தன்னுடைய மருமகனுக் கூடாகவே கர்த்தர் தன்னை ஆசீர்வதித்ததை நினைத்து, யாக்கோபைப் போகாமல் தரித்து நிற்கும்படி மன்றாடினான். யாக்கோபு ஒரு முக்கிய நிபந்தனையுடன் நிற்பதற்குச் சம்மதித்தான்.: புள்ளி உள்ள ஆடுகள் தன்னுடைய ஆடுகளாக ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்..இந்தத் திட்டத்தினால் கர்த்தர் யாக்கோபை வல்லமையாக ஆசீர்வித்தார்.

**31:1-55** .***உன்னுடைய தகப்பனார் தொடர்ந்தும் என்னை ஏமாற்றுகிறார்.***

என்னைச் சமாதனத்துடன் போகவிடுங்கள். யாக்கோபுவின் வெற்றி லாபானுக்கு மிகுந்த எரிச்சலைக் கொடுத்து.அதனால் உடன்படிக்கையை மாற்றத் தொடங்கினான்.இதுவே காரானை விட்டு கானானுக்குப் போவதற்கான நல்ல தருணம் என்று தீர்மானித்தான். அவர்கள் புறப்படப் போகின்றார்கள் என்பதை அறிந்த லாபான் அவர்களைப் பிடிப்பதற்கு முயற்சி செய்தான். ஆனால் கர்த்தர் தரிசனத்தில் தோன்றி அவர்களைக் துக்கப்படுத்த வேண்டாம் என்று எச்சரித்தார், அவர்களை வாகனத்துடன் கைப்பற்றிய லாபான், தன்னுடைய வீட்டின் விக்கிரகத்தை திருடியதாக குற்றம் சாட்டினான்.. யாக்கோபுவுக்குத் தெரியாமல் ராகேல் விக்கிரகத்தை எடுத்துவந்தாள். . இறுதியாக அவர்கள் ஒரு சமாதான முடிவிற்கு வந்தார்கள், ஒரு கற்குவியலை நிறுத்து ஒருவருக்கொருவர் இனிமேல் தீங்கு செய்யாமல் இருப்போம் என்று பொருத்தனை செய்தார்கள். . ராகேல் விக்கிரகத்தை மறைத்துக் கொண்டுவந்ததிலிருந்து, இஸ்ரவேலின் முதல் குடும்பமே பாகால் வணக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை காண்பிக்கின்றது.

**32:1-21** ***இன்னமும் ஏசா என்னைக் கொல்ல விரும்புகிறாரா?***

யாக்கோபு தன்னுடைய குடும்பத்தைக் காரானுக்குக் கூட்டிச் செல்லும் போது, , தன்னுடைய சகோதர னாகிய ஏசா,. தன்னைச் சந்திப்பதற்காக ஒரு கூட்டமாய் வருகிறார் என்று அறிந்து கொண்டார் ஏசாவின் கோபத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளுமாறு கர்த்தரிடம் வேண்டிக் கொண்டான். . ஏசாவைச் சாந்தப் படுத்தும் நோக்கத்துடன் , மிருக நன்கொடைகளை யாக்கோபு அனுப்பினான்.

**32:22-32 ஒரு இரவு முழுவதும் கர்த்தருடன் பேராடினான்.**

யாக்கோபு, ஏசாவுக்குப் பயத்தில் இரவு நித்திரை செய்யும் போது, அவர் கர்த்தருடன் தன்னை ஆசீர்வதிக் கும்படி போராடினான், கர்த்தர் அவருக்கு இடுப்பில் சுழுக்கு ஏற்படுத்தி அவருடைய பெயரையும் மாற்றி னார். ("கர்த்தருடன் போராடினவர்"). யாக்கோபு அந்த இடத்திற்கு **பெனியேல்** என்று பெயரிட்டான். ("கர்த்தரு டைய முகம்"). அவர் ஆரம்பத்தில் யாக்கோபு (ஏமாற்றுக்காரன்) என்ற பெயர் இருந்த போதிலும் அவரு டைதய சந்த்தியினர் புதிய பெயரிலேயே இவரை அறிந்திருந்தார்கள்.

பெனியேலிலும்,பெத்தேலிலும் யாக்கோபு கர்த்தரைச சந்தித்ததின் வேறுபாட்டைக் கவனிப்போம் (28:10-22):

- பெத்தேலில் கர்த்தர் யாக்கோபின் இருதயத்தைத் தொட்டார்.பெனியேலில் தன்னுடைய உயிருக்காக யாக்கோபு போராடினான்.

- பெத்தேலில் யாக்கோபினுடைய மனமாற்றமும் இரட்சிப்பையும் காண முடிகின்றது. பெனியேல் யாக்கோபுடைய பிரதிஷ்டையும், பரிசுத்தத்தையும் காண்பிக்கின்றது.

- பெத்தேல், சமாதானத்தின் கர்த்தரை யாக்கோபுவுக்கு அறிமுகப்படுத்துகிறது.; பெனியேல் இலவசமாக சமாதானத்தைக் கொடுக்கின்றது. இப்போது யாக்கோபு தன்னுடைய ஜீவனை மட்டுமல்ல அனேக ஜீவனைச் சுதந்தரித்துக் கொண்டார். (யோவான் 10:10; ரோமர் 5:1; பிலிப்பி. 4:7).

**33:1-16** ***யாக்கோபு, ஏசா :***

*மீண்டும் இணைந்து கொண்டதனால் விடுதலை.* . ஏசாவுடன் மீண்டும் இணைந்து கொண்டதனால் யாக்கோபுவுக்கு நிம்மதி ஏற்பட்டது. அவன் ஏசாவுக்கு தன்னுடைய பிள்ளைகளையும் மனைவிகளையும் அறிமுகப்படுத்தினான். சகோதரர்கள் இருவரும் நண்பர்களைப் போல பிரிந்து சென்றார்கள்.

**33:17–34:31** ***தீனாள், சீகேம்*** :

***கற்பழிப்பும்,பழிவாங்குதலும்***.

சீகேம் நகரத்திற்குச் சமீபமாக யாக்கோபு நிலத்தை வாங்கி, அங்கு தன்னுடைய கூடாரத்தை அமைத்து பலிபீடத்தையும் கட்டினான். சில காலத்திற்குப்பிற்பாடு, யாக்கோபின் ஒரே மகள் தீனாள்,கோமாரின் மகனான சீகேம் என்பவனால் கற்பளிக்கப்பட்டாள். கோமார், யாக்கோபைச் சந்தித்து திருமண ஒழுங்குக ளை மேற்கொண்டான். கற்பழிக்கப்பட்டதை அறிந்து, தீனாளின் சகோதரர்கள் கடும் கோபத்தில் இருந்தா ர்கள். திருமணம் நடைபெறுவதற்கு முன்பாக கோமாரும், அவருடைய பிள்ளைகள் யாவரும் விருத்த சேதனம் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள்..விருத்தசேதன வேதனையிலிருந்து மீள்வதற்கு முதல் சிமியோனும்,லேவியும் அவர்கள் அனைவரையும் கொலை செய்துவிட்டார்கள். கானானியர்களுக்கு இவர்களின் நடத்தை ஒரு களங்கமாக அமைந்தது என்று யாக்கோபு தன்னுடைய பிள்ளைகளைக்கடிந்துகொண்டான்.

**35:1-15** ***மீண்டும் பெத்தேலுக்கு வாந்தார், மீண்டும் ஆசீர்வாதம்***.

கர்த்தர், யாக்கோபுக்கு மீண்டும் கர்த்தர் சந்தித்த இடமாகிய பெத்தேலுக்குப் போகும்படி கட்டளையிட்டார். (12:6-9; 13:3-4; 28:11-19), அப்பொழுது யாக்கோபு தன் வீட்டாரையும் தன்னோடேகூட இருந்த மற்ற அனைவரையும் நோக்கி: உங்களிடத்தில் இருக்கிற அந்நிய தெய்வங்களை விலக்கிப்போட்டு, உங்களைச் சுத்தம் பண்ணிக் கொண்டு, உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள் என்று கூறி பலி பீடத்தைக் கட்டுவித்தான். கர்த்தர் யாக் கோபுக்கு பெத்தேலில் தரிசனமாகி, அவனது புதிய பெயரை நினைவுபடுத்தி, ஆபிரகாமின் உடன்படிக் கையையும் நினைவுபடுத்தினார். ஏணியின் தரிசனத்தைக்கண்ட இடத்தில் மீண்டும் ஒரு முறை கல்லி னால் உருவாக்கப்பட்ட தூணை அபிஷேகம் பண்ணினார்.(28:18).

**35:16-20** ***பென்ஜமின்***. :

துக்கத்தின் மகன்,பெலத்தின் மகன்.

பெத்தலகேமிற்கு வரும் வழியில்,பென்ஜமினைப் பிரசவித்து மரித்து அடக்கம் பண்ணப்பட்டாள். (35:19). அவள் தன்னுடைய மகனுக்கு பென்-ஒனி என்று பெயரிட்டாள், "என் துக்கத்தின் மகன்" என்பதாகும், , ஆனால் யாக்கோபு பென்ஜமின் " என்வலதுகரத்தின் மகன்" என்று பெயரிட்டான். பலநூற்றாண்டுகளுக்குப் பிற்பாடு ஒரு இளம் கன்னி ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள், அவர் துக்கத்தின் மகன் என்று அறிமு கமானார். (ஏசா. 53:3) அது மட்டுமல்லாமல் உன்னதத்திலுள்ள மகத்துவமான வருடையவலது பாரிசத்திலே உட்கார்ந்தார்.(ஏப:3).

**35:21-26** ***றூபனின் சட்டவிரோத உறவு***.

யாக்கோபின் மூத்தமகனாகிய றூபன் தன்னுடைய தகப்பனாரின் மறுமனையாட்டியாகிய பில்லாவுடன் உறவில் ஈடுபட்டான். .

**35:27-29** ***தகப்பனாரின் மரணவீட்டில் மீண்டும் ஒன்று சேர்ந்தார்கள்***.

ஈசாக்கு தன்னுடைய 180வது வயதில் மரணமடைந்தார். . தகப்பனாரை மக்போலாவில் அடக்கம் செய்யும் போது யாக்கோபும், ஏசாவும் மீண்டும் ஒரு முறை சந்தித்தார்கள்.

**36:1-43** ***ஏசாவின் சந்த்தியினர்***.

ஏசாவின் சந்த்தியினர் ஏதோமியர்களாகும், இவர்கள் இஸரவேலர்களின் எதிரிகளாகும்.

**37:1-17 . யோசேப்பு தன்னுடைய கனவினால் வெறுப்படைந்திருந்தான்**.

யேசேப்பின் குடும்பத்தில் முரண்பாடுகள்காணப்பட்டது.. யோசேப்பின் சகோதரர்கள் அவனை யாக்கோபின் செல்லப்பிள்ளையாக இருந்ததாலும், முழுக் குடும்பமும் அவனை வணங்குவதாக அவன் கண்ட கனவுகள் நிமித்தமும் வெறுத்தார்கள்.

**37:18-36 யோசேப்பு விற்கப்பட்டான்.யாக்கோபு வஞ்சிக்கப்பட்டான்**.

யோசேப்பினுடைய சகோதரர்கள் அவனை அடித்தார்கள் அவனுடைய விலையுயர்ந்த சட்டையைக் கழற்றினார்கள், எகிப்திற்கு போய் கொண்டிருக்கும் இஸ்மவேலரிடத்தில் அவனை விற்றுப் போட்டார்கள். அவன் ஒரு மிருகத்தினால்கொல்லப்பட்டான் என்று சொல்லத்தக்கவாறு அவனுடைய அங்கிகளில் இரத்தத்தைப் பூசினார்கள். .யாக்கோபு விதைத்ததை அறுப்பதை நாம் உணரமுடிகின்றது. (கலா. 6:7-8): யாக்கோபு தன்னுடைய சகோதரனை இளம் ஆட்டுத்தோலைப் பயன்படுத்தி ஏமாற்றினான். (27:16);

**38:1-10** ***ஏர், ஓனான்:***

***இரண்டு சகோதர்ரும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பினால் மரணமடைந்தார்கள்.***

யூதாவும் வீட்டைவிட்டுச் சென்று கானானியப் பெண்ணைத் திருமணம் செய்தான். அந்தத் திருமணம் இஸரவேலியச் சட்டத்திற்கு முரணானது. (24:3; 28:1) கர்த்தர் அவனுடைய பிள்ளைகள் இருவரையும் நியாயந்தீர்த்தார்.. ஏர் முதலில் மரித்தான், ஓனான் தகப்பனாக விரும்பாதபடியால் மரித்தான்.

**38:11-26** ***தாமாரும் யூதாவும்.:***

**வேசித்தனம்**

ஏர் இன் மனைவியாகிய தாமாருக்கு சந்ததியை உருவாக்க ஓனான் விரும்பவில்ல ஓனான் மரித்தபின்பு யூதா அவளுக்கு மூன்றாவது மகனை திருமணம்செய்து கொடுக்க விரும்பவில்லை. அவள் தனக்கு குழந்தை தேவை என்று உணர்ந்து, யூதாவை ஏமாற்றி அவனுடன் பாலியல் உறவில் ஈடுபட்டாள். . தாமாருக்கு குழந்தை உருவாகியிருக்கிறது என்பதைக் கேள்விப்பட்ட யூதா, தன்னுடைய சுயநீதியில், அவளைக் கொலை செய்ய உத்தரவிட்டாள். , பின்பு அந்தக்குழந்தை தன்னுடையது என்பதை அறிந்து அந்தப்பாவத்திற்குமன்னிப்புக் கோரினான்.(38:24-26)

**38:27-30** ***மூத்தவனுக்கும் இளையவனுக்குமுள்ள இன்னுமொரு வழக்கு. .***

தாமாருக்கு இரண்டு ஆண்பிள்ளைகள் வயிற்றில் இருந்தார்கள்.அவள் பெறுகிறபோது, ஒரு பிள்ளை கையை நீட்டினது; அப்பொழுது மருத்துவச்சி அதின் கையைப் பிடித்து, அதில் சிவப்புநூலைக் கட்டி, இது முதலாவது வெளிப்பட்டது என்றாள். அது தன் கையைத் திரும்ப உள்ளே வாங்கிக்கொண்டபோது, அதின் சகோதரன் வெளிப்பட்டான். அப்பொழுது அவள்: நீ மீறிவந்ததென்ன, இந்த மீறுதல் உன்மேல் நிற்கும் என்றாள்; அதினாலே அவனுக்குப் **பாரேஸ்** என்று பேரிடப்பட்டது. பிற்பாடு கையில் சிவப்புநூல் கட்டியிருந்த அவனுடைய தம்பி வெளிப்பட்டான்; அவனுக்கு **சேரா** என்று பேரிடப்பட்டது.

**39:1-18** . ***யோசேப்பு அவளைவெறுத்தான், அதனால் அவள் அவனை நினைத்திருந்தாள்.***

யோசேப்பை வாங்கிய இஸ்மவேலர்கள் போத்திபாரிடம் அவனை விற்றுப்போட்டார்கள். . யோசேப்பை பாலியலுக்குள்படுத்த போத்திபார் மனைவி முற்சி செய்தாள், ஆனால் அதற்கு இணங்க மறுத்து யோசேப்பு வீட்டை விட்டு ஓடினான். இதனால் ஆத்திரமடைந்த போத்திபார் மனைவி,யோசேப்பு தன்னைக் கற்பளித்து விட்டதாக பார்வோனிடம் கூறினான்.

**39:19-23 யோசேப்பு சிறைச்சாலையில் நன்றாக விருத்தியடைந்தார்கள்**.

தன்னுடைய மனைவியின் குற்றச் சாட்டுக்களை நம்பிய போத்திபார் யோசேப்பை சிறையில் அடைத்தான்..ஆனால் கர்த்தர் யோசேப்புடன் இருந்தார்.பிரதான சிறை அதிகாரி அவனை சிறைக்கைதிகளுக்கு காவலாளியாக வைத்தார்.

**40:1-23 இரண்டு கனவுகளின் தைகள்.**

யோசேப்புடன் சிறையிருப்பில் இருந்த ராஜாவின் ஊழியக்காரர்கள், வித்தியாசமான இரண்டு தரிசனங்கள் கண்டார்கள், அவற்றை யோசேப்பு அவற்றிற்கு சரியான விளக்கங்கள் கூறினான்.

**41:1-36** ***பதின் நான்கு வருடத்திற்கான முன்னறிவிப்பு*** . பார்வோன் இரண்டு தரிசனங்களைக் கண்டு குழம்பினான், யோசேப்பு அர்த்தம் சொல்வதற்காக அழைக்கப்பட்டான்.இந்தத் தரிசனங்கள் பெரிய பஞ்சம் எகிப்தில் வருவதை வெளிப்படுத்துவதாக யோசேப்பு கூறினான்.

**41:37-57** ***சிறைக் கைதியாக இருந்தவன் பிரதம மந்திரியாக உயர்த்தப்பட்டான்.***

எகிப்தில் பஞ்சகாலம் வருவதை முன்னறிவித்தபடியால் பார்வோன் யோசேப்பை பிரதம மந்திரியாக்கினான். . யோசேப்பு ஆசனேத் என்னும் எகிப்திய பெண்ணைத் திருமணம் செய்தான். (41:45), அவருக்கு இரண்டு பிள்ளைகளும் உண்டு. (41:50-52). கசப்புகளை மறக்க கர்த்தர் உதவினார் என்பதற்காகவே. முதலாவது மகனுக்கு **மனாசே** என்று பெயரிட்டான், சந்தோஷமான நிகழ்காலமும், எதிர்காலமும் இருப்பதற்காக, இரண்டாவது மகனுக்கு எப்பிராயீம் என்று பெயரிட்டான்.. தன்னுடைய முப்பதாவது வயதில் சிறையிலிருந்து மாளிகைக்கு உயர்த்தப்பட்டான். ,ஆனால் இந்த உயர்ச்சி பல வருடகால உபத்திரபத்திற்குப் பின்பே கிடைத்தது.(சங் 75:6-7; 1பேது.5:6).

**42:1-38** ***யோசேப்பின் சகோதரர்கள் அவரை வணங்கினார்கள்..***

கானானில் பெரிய பஞ்சம் உண்டாயிற்று. . யாக்கோபு தன்னுடைய மகன்மாரை உணவுபெற்று வரும்படி எகிப்திற்கு அனுப்பினான். . எகிப்தின் பிரதான ஆளுநரை அவர்கள் வணங்கினார்கள், அவர் யோசேப்பு என்று அறியாதிருந்தார்கள், ஆனால் யோசேப்பு அவர்களை அறிந்திருந்தான். அவர்களுக்கு உணவு கொடுத்து அவர்களை அனுப்பினான், அனால் பென்ஜமின் வரும்வரை சிமியோனை கைதியாக வைத்திருந்தான். பென்ஜமினை எகிப்திற்கு அனுப்புவதற்கு யாக்கோபு மறுத்துவிட்டான்.

**43:1-34 பென்ஜமீன் எகிப்திற்கு கொண்டுவரப்பட்டான்**.

முதலாம் தரம் கொண்டு செல்லப்பட்ட உணவுகள் முடிவடைந்தபோது, யாக்கோபு பென்ஜமீனையும் கூட்டிக் கொண்டு எகிப்பிற்குச் செல்லுமாறு வேண்டிக் கொண்டான். உணவுக்குப்பொறுப்பாக இருந்த அதிகாரிக்கு அனேக வெகுமதிகளையும் கொண்டு சென்றார்கள். . அவர்கள் எகிப்திற்கு வந்து சேர்ந்தபோது, யோசேப்பு அவர்களுக்கு விருந்துக்கு ஏற்பாடு செய்தான். . இந்த எகிப்திய அதிகாரி அவர்களை அவர்கள் வயதிற்கேற்ப வரிசையாக உட்காரவைத்ததைக் கவனித்து அவர்கள் வியந்துபோனார்கள். .பென்ஜமீனுக்கு அவர்களைவிட அதிகமாகக்கொடுக்கப்பட்டது.

**44:1-34 அவருடைய பொதியில் ஒரு வெள்ளிப் பாத்திரம் இருந்தது**.

சகோதரர்கள் மீண்டும் கானான் போகப் புறப்பட்டபோது, யோசேப்பு இரகசியமாக பென்ஜமீனின் பொதியில் வெள்ளிப் பாத்திரத்தைவைத்தார். .யோசேப்பின் ஊழியக்காரர்கள் யோசேப்பின் சகோதரர்களின் பொதிகளைச் சோதித்தபோது பாத்திரத்தைக் கண்டுபிடித்தனர். பாத்திரத்தைக் களவுசெய்தபடியால் பென்ஜமீன் தனக்கு அடிமையாக இருக்க வேண்டும் என்று யோசேப்பு கூறினான். துக்கமடைந்த யூதா தன்னை பென்ஜமீனுக்காகவைத்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொண்டான்.

**45:1-28** .***நான் யோசேப்பு, உங்கள் சகோதரன்***.

இதற்குமேல் தன்னுடைய இரகசியத்தைக் காக்கமுடியமல் யோசேப்பு தன்னை தன் சகோதரர்களுக்கு வெளிப்படுத்தினான். . தன்னை அடிமையாக விற்றதற்காக தான் கோபமடையவில்லை என்று திரும்பவும் அவன் அவர்களுக்கு உறுதிப்படுத்தினான். : அடிமைத்தனத்திற்கு கர்த்தர் ஒரு நோக்கம் வைத்திருக்கிறார்., பஞ்சகாலத்தில் பலரின் உயிர்களைக் காக்கச்செய்தார். அவர்களை திரும்பவும் வீட்டுக்குச் சென்று யாக்கோ

பைக் கூட்டிவரும்படி யோசேப்பு கூறினான். யாக்கோபு பல நன்கொடைகளை யாக்கோபுவிற்கு அனுப்பி னான். . யோசேப்பு உயிருடன் இருப்பதாகக் கூறியதை முதலில், யாக்கோபு நம்பவில்லை, ஆனால் வாகன ங்களில் எகிப்திய பொருட்கள் வந்ததைக் கண்டபோது அவன் நம்பினான்.

**46:1-27 எகிப்திற்குப் போங்கள், நான் உங்களை மீண்டும் கானானுக்கு கூட்டிவருவேன்**.

பஞ்சத்திலிருந்து காத்துக் கொள்ளும்படி எகிப்திற்குப் போகும்படி கர்த்தர் யாக்கோபுக்குக் கூறினார், ஆனால் உங்கள் சந்ததியார் ஒருநாள் வாக்களிக்கப்பட்ட தேசமாகிய கானானுக்கு வருவார்கள் என்று கூறினார்.ஆதி 46:8-27 இல் 66 யாக்கோபின் குடும்பங்கள் எகிப்திற்குச் சென்றார்கள் என்று கூறுகின்றது. யோசேப்பு,அவரின் மனைவி, இரண்டு பிள்ளைகளுடன் சேர்த்து 70 இஸ்ரவேலர்கள் இப்போது எகிப்தில் இருக்கிறார்கள். இது 1876 கி.மு. , யாத்திரகாமத்திற்கு 430 வருடங்களுக்கு முன்பாக.நடந்தது. ( 15:13 ,. யாக் 12:40).

**46:28–47:10** *அரண்மனையில் தங்களைக் காண்பித்து, கோசானில் ஒன்று கூடினார்கள்.*

யாக்கோபு,யோசேப்பு கோசானில் சந்தித்தனர்.. யோசேப்பின் ஆலோசனையில் முழுக்கோத்திரமும் அங்கே கூடினார்கள், காரணம் எகிப்து முழுவதும் மேய்ப்பர்கள் இழிவானவர்கள் என்று கருதப்படுவதில்லை. யோசேப்பு பின்பு , தன்தகப்பனையும் ஐந்து சகோதரர்களையும் பார்வோனுக்கு அறிமுகம் செய்தான். அத்துடன் தாங்கள் கோசானில் குடியிருக்கப் போவதாகவும் அறிவித்தார்கள்.

**47:11-26** ***யேசேப்பின் தன்னலமற்ற வரி.*** :

***பார்வோனுக்கு 20% மட்டும்.*** . பஞ்சம் அதிகரித்தபோது,ஜனங்கள் தங்கள் கையிலிருந்த பணம் யாவற்றையும் செலவு செய்துவிட்டார்கள். ஆடுமாடுகளுக்குப் பதிலாக தானியம் கொடுக்கப்பட்டது. விளைவில் ஐந்தில் ஒரு பங்கைப் பார்வோனுக்குக் கொடுக்கவேண்டும்; மற்ற நாலு பங்கும் வயலுக்கு விதையாகவும் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் ஆகாரமாகவும் வைத்துக் கொள்ளுங்கள் என்று யோசேப்பு ஜனங்களுக்கு கூறினான்.

**47:27-31** ***யாக்கோபின் இறுதி வேண்டுகோள்:கானானில் என்னை அடக்கம் செய்யுங்கள்***

தன்னுடைய 147 வது வயதில் தனக்கு மரணம் வரலாம் என்று எண்ணி, எபிரோனில் உள்ள மக்பேலா விலே தன்னை அடக்கம் பண்ணும்படி கேட்டுக் கொண்டார்.. யோசேப்பு அதன்படி செய்வதாக வாக்களித் தான். (50:13).

**48:1-22** ***வலக்கரம் தவறான தலையின் மேல் ?***

யோசேப்பினுடைய பிள்ளைகளை யாக்கோபு ஆசீர்வதிக்கும் போது , அவர் தன்னுடைய வலது கரத்தை மனாசேக்கிப்பதிலாக இளேயவனாகிய எப்பிராயீம் தலையின் மீதும் வைத்து ஆசீர்வதித்து எப்பிராயீம், மனாசேயைவிட பெரியவனாவான் என்று கூறினார். 450 வருடங்களுக்குப்பின்பு மோசே இதனை ஏற்றுக் கொண்டார். (Deut. 33:17).

**49:1-33** ***தகப்பனார் தங்கள் குடும்பத்தின் எதிர்காலம் பற்றிக் கூறினார்கள்.***

யாக்கோபு தன் குமாரரை அழைத்து: நீங்கள் கூடிவாருங்கள், கடைசி நாட்களில் உங்களுக்கு நேரிடும் காரியங்களை அறிவிப்பேன் என்று கூறினான். யூதா கோத்திரத்திலிருந்து மேசியா வருவார் என்று கூறினார்.ஒவ்வெரு பிள்ளைகளின் வாழ்க்கைபற்றியும் யாக்கோபு முன்னறிவித்தான். ஒரு மனிதனின் நடத்தை அவனது பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் பாதிக்கும் என்றும் கூறினார்.மோசேயும்

இவ்வாறாகவே 12 கோத்திரத்தாரையும் ஆசீர்வதித்தார். (உபாக 33).

**50:1-13** ***எகிப்தியர், எபிரேய முற்பிதாக்களைக் கனம் பண்ணினார்கள்..***

எகிப்து முழுவதும் யாக்கோபின் மரணத்தைக் கொண்டாடினார்கள். 70 நாட்கள் துக்கம் கொண் டாடினார்கள். யாக்கோபின் உடல் அடக்கம் செய்வதற்காக கானானுக்குக் சகல மரியாதை களுடனும் கொண்டு செல்லப்பட்டது.

**50:14-21** எங்கள் தகப்பன் மரித்துவிட்டார், நாங்களும் மரித்தவர்களானோம்.

யோசேப்புடைய குற்ற இருதயமுள்ள சகோதரர்கள், தங்கள் தகப்பன் மரித்துப் போனபடியால், தங்களையும் யோசேப்பு கொன்றுபோடுவான் என்று யோசித்தார்கள். . ஆனால் யோசேப்பு தனக்கு அப்படி ஒரு எண்ணம் இல்லை என்று மீண்டும் உறுதிப்படுத்தினான், கர்த்தர் தன்னை எப்படிக் காத்துவந்தார் என்பதை கவனத்தில் கொண்டான்.

**50:22-26** ***யோசேப்புவின் இறுதி வேண்டு கோள்: என்னைக் கானானில் அடக்கம் செய்யுங்கள்."***

யோசேப்பு தன்னுடைய 110 வயதில் மரணமடைந்தார். . கானானில் அடக்கம் செய்ய வேண்டும் என்ற வேண்டு கோள் நிறைவேற்றப்பட்டது, ஆனால் நூற்றாண்டிகள் பல கழிந்தே இடம்பெற்றது. (யாக். 13:19).

**ஆதியாகமம், புத்தகத்திலிருந்து ஞாபகப்படுத்தப்பட வேண்டியவர்கள்.**

## 1. ஆதாம்.

**முக்கிய குறிப்புகள்.:**

உலகத்தின் முதல் மனிதன் (1:27; 2:7)

மனைவி: ஏவாள் (2:20-25; 3:20)

பிள்ளைகள் : காயீன், ஆபேல், சேத், பெயர் குறிப்பிடப்படாதோர். (4:1-2, 25; 5:4)

பெண்பிள்ளைகள் : பெயர் குறிப்பிடப்படவில்லை.(5:4)

தொழில் : விவசாயி (2:15; 3:17-19, 23)

மரணமடைந்த வயது : 930 (5:5)

முக்கிய வேதாகம குறிப்புகள் : 1:26–5:5; 1 நாளா. 1:1; யோபு 31:33 ; லூக்3:38; ரோமர் . 5:12-15; 1 கொரி. 15:22, 45; 1 திமேத். 2:12-14

**ஆதாமிடமிருந்து கற்றுக் கொள்ளக் கூடிய ஆவிக்குரிய பாடங்கள்**

- பாவத்தினால் நாம் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டுள்ளோம் என்பதை நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது,நாம் கர்த்தரின் சாயலாக உருவாக்கப்பட்டுள்ளோம். (1:26-27).
- நன்மையையும், தீமையையும் பகுத்தறியக் கூடிய திறமையைக் கர்த்தர் எங்களுக்குத் தந்துள்ளார், நாம் தெரிவு செய்யும் ஒவ்வொரு தெரிவும் மிக முக்கியமானவையாகும். (3:6, 11-12, 16-19).
- கர்த்தரிடமிருந்து நம்மை மறைத்துக் கொள்வது முடியாத காரியமாகும். (3:8).

• பாவம் எப்போதும் பழியையும்,(3:7), பயத்தையும் (3:10), ,வேதனையையும்(3:16-19). கொண்டுவரும்.

• எங்களுடைய பாவம் பல உயிர்களைப் பாதிக்கும்,; இது உலகம் முழுவதையும்கூடப்பாதிக்கும். (ரோமர் 5:12).

**முக்கிய வசனம்..:**

ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். (1 Cor. 15:22).

## 2. ஏவாள்.

**முக்கிய குறிப்புகள்.::**

உலகின் முதல் பெண்மணி (2:21-22)

கணவர்: ஆதாம்

ஆண்மக்கள்: காயீன் , ஆபேல்,சேத் பெயரிடப்படாதோர் (4:1-2, 25; 5:4)

பெண் பிள்ளைகள் : பெயரிடப்படாதோர் (5:4)

முக்கிய வேதாகம குறிப்புகள்: 2:19–4:25; 2 கொரி. 11:3; 1 திமே. 2:12-14

**ஏவாளிடமிருந்து கற்றுக் கொள்ளக் கூடிய ஆவிக்குரிய பாடங்கள்**

• சாத்தான் எதிர்பாராத நேரங்களில் எங்களைப் பரிசோதிக்கிறான் (3:1-5).

• எங்கள் பாவத்திற்கான முழுப் பொறுபிபினையும் நாமே எற்றுக் கொள்ளல் வேண்டும். ; பாவத்தின் விளைவுகளை நாமே சுமந்து கொள்ள வேண்டும். (3:6, 13, 16).

• கர்த்தருடைய பிள்ளைகள் பிசாசை (யாக் 4:7; 1 பேதுரு. 5:9) எதிர்த்துப் போராட வேண்டும் எபேசி. 6:13-14) வாக்குவாதம் செய்தல் கூடாது. (3:2-3).

• நம்மைச் சுற்றி இருக்கும் சகலதும் நம்மை நன்மைக்கோ, தீமைக்கோ நம்மை ஆளுகைசெய்யும். (3:6).

**முக்கிய வசனம்..:**

தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார். (2:18).

## 3. காயீன்

முக்கிய விடயங்கள்.;

முதலாவது பிள்ளை உலகத்தில் பிறந்தது, முதலாவது கொலையாளியும் உலகத்தில் பிறந்தார் (4:1, 8)

பிறப்பு : 4:1 இல் பதியப்பட்டுள்ளது

சகோதரர்கள் : ஆபேல், சேத்,பெயர் குறிப்பிடப்படாதோர். (4:2, 25; 5:4)

சகோதரிகள் : பெயர் குறிப்பிடப்படாதோர் (5:4)

ஆண்பிள்ளைகள் : ஏனோக்கு (4:17; 5:21-24)

தொழில் : விவசாயி, கட்டுமானம் செய்பவர் (4:2-3, 17)

முக்கிய மேற்கோள்.: 4:1-17; எபிரே. 11:4; 1 யோவான் 3:11-12; யூட் 1:11

**காயினிடமிருந்து கற்றுக் கொள்ளக் கூடிய ஆவிக்குரிய பாடங்கள்**

- கர்த்தருடைய உறவில் கீழ்ப்படிதல் மிக முக்கியமானது. (4:3-7; எபிரே. 11:4).
- பொறாமை கொள்ளுதல் பாவத்திற்கும் கொலைக்கும் வழிநடத்தும். (4:1-8; 1 யோவான். 3:12).
- எங்கள் சுயசக்தியைப் பாவத்திற்கு எதிராகப் பயன்படுத்தல் வேண்டும். (4:7).
- பாவம் வாழ்நாள் முழுவதும் தாக்கத்தைத் தந்து கொண்டே இருக்கும். (4:9-12).
- கர்த்தர் இல்லாமல் இருப்பது தனிமையான வாழ்வாகும். (4:10-14).
- கர்த்தர் தனக்கு எதிராகப் பாவம் செய்பவர்களைக் கூட பாதுகாக்கின்றார், கவனிக்கின்றார். (4:13-15).

**முக்கிய வசனம்**.

நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார். (4:7).

## 4. நோவா

முக்கிய விடயங்கள்.;

குடும்பத்தை வெள்ளத்திலிருந்து பாதுகாக்க உதவினார்.(6–8)

தகப்பன்; லாமேக்கு (5:28-29)

சகோதரர்கள் : பெயரிடப்படாதோர் (5:30)

சகோதரிகள் ; பெயரிடப்படாதோர் (5:30)

ஆண்பிள்ளைகள் ; சேம், காம், யாபேத். (5:32)

தொழில் : விவசாயி, கப்பல் கட்டுபவர் (6:14-22; 9:20)

மரணமடைந்த வயது : 950 (9:28-29)

முக்கிய மேற்கோள்.: 5:28–10:32; ஏசா. 54:9; எசேக். 14:12-14, 19-20; லூக் 3:36; 17:26-27; எபிரே. 11:7; 1பேது. 3:19-20; 2 பேது 2:5

**நோவாவிடமிருந்து கற்றுக் கொள்ளக் கூடிய ஆவிக்குரிய பாடங்கள்**

- ஒரு பரம்பரையே பிசாசுடன் வாழ்ந்த போதிலும் (6:5; 2 பேது. 2:4-9). கர்த்தருடன் நாம் நடக்க முடியும் (6:9),
- ஒரு மனுஷனுடைய விசுவாசம் பலருடைய இரட்சிப்புக்கு வழிநடத்தும். (6:8-9; 7:7).
- உண்மையான விசுவாசம் கீழ்ப்படிந்து செயற்படும். (6:22).
- எங்கள் விசுவாசம் கீழ்ப்படியாதோரைக் குற்றப்படுத்தும். (எபி. 11:7).
- நோவாவின் காலத்தில் கர்த்தர் இல்லாமல் ஜீவித்ததைப் பார்க்கும் போது, எங்கள் நாட்களிலும் அப்படி ஜீவிப்பவர்களைப் பார்த்து ஆச்சரியப்படத் தேவையில்லை.(6:1-8; லூக் 17:27; 1பேது. 4:12).
- வளர்ந்த விசுவாசிகள் கூட, காவல் விலக்கப்பட்டிருந்தால் கொடிய பாவத்தில் விழுந்துவிடுவார்கள். (9:20-29; 1கொரி 9:27).

**முக்கிய வசனம்**.

நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது. (6:8).

## 5. ஆபிரகாம்.

**முக்கிய குறிப்புகள்**.

எபிரேய தேசத்தின் தகப்பன், விசுவாசத்தின் மாதிரியுமானவர். (12:1-3;ரோம 4:11)

பிறப்பு: 11:26இல் பதியப்பட்டுள்ளது.

தகப்பன் : தோரா (1:26)

சகோதரர்கள்: நாகூர், காரான் (11:26) சகோதரி: ஒன்றுவிட்ட சகோதரி, சாரா (20:12)

மனைவிமார்கள் : சாரா, ஆகார், கெத்தூரா (11:29; 16:3; 25:1)

பிள்ளைகள் : ஆகார் மூலமாக : இஸ்மவேல் (16:15-16);

சாரா மூலமாக :ஈசாக்கு (21:2-3);

கெத்தூராள்.மூலமாக : சிம்ரானையும், யக்க்ஷானையும், மேதானையும், மீதியானையும், இஸ்பாக்கையும், சூவாகையும் பெற்றான். (25:1-2)

தொழில்.: மேய்ப்பன், நிலச் சொந்தக்காரன். (13:2)

**அவருடைய வாழ்க்கையின் முக்கிய சம்பவங்கள். :**

- கர்த்தரால் அழைக்கப்பட்டவர் (12:1-8)
- கர்த்தருடைய வக்குறுதிகள் மீளவும் உறுதிப்படுத்தப்பட்டன. (13:14-18)
- அவர் மெல்கிசிதேக்கைச் சந்தித்தார். (14:17-24)
- அவருடைய புதிய பெயர். (17:5)
- ஈசாக்கின் பிறப்பு (21:1-3)

- ஈசாக்கைப் பலியிடுமாறு கூறுதல் (22:1-14)

மரணமடைந்தபோது வயது.: 175 (25:7-10)

முக்கியமான வேதாகம மேற்கோள் : 11–25; யாத் 2:24; 2 ராஜா 13:23; ஏசா 41:8; 51:1-2; யோவான் 8:39; அப் 7:1-8; ரோம 4; கலாத். 3:1-18; எபி. 11:8-10, 17-19; யாக் 2:21-23

**ஆபிரகாமிடமிருந்து கற்றுக் கொள்ளக் கூடிய ஆவிக்குரிய பாடங்கள்.**

- கர்த்தருடைய வெளிப்படுத்தல்கள் விளங்காத போதிலும், கர்த்தருக்கு கீழ்ப்படிதல்.விசுவாசம் எனப்படும். (12:1-9; 22:1-18;எபிரே. 11:17-19).
- கர்த்தரைப் பின்பற்றும் போது, உலகத்துடனான எங்கள் உறவு மாற்றம் அடைகின்றது. ;இது எங்கள் நண்பர்களுடன் உள்ள உறவையும், குடும்பங்களுடன் உள்ள நெருக்கமான உறவுகளையும் குறிக்கின்றது. (12:1;ரோம. 12:2).
- சில விடயங்களை நாம் கையாளும் போது, அவை மற்றவர்களுக்கும், எங்களுக்கும், பிரச்சனைகளை உருவாக்குகின்றன,(16:1-16; 21:8-21).
- பொய் சொல்லுதல் பிரச்சனைகளை அதிகரிக்குமே தவிர, குறைக்க மாட்டாது. (12:10-20).
- கர்த்தரை விசுவாசித்தல், அதை அவர் நீதியாக எண்ணப்படும். (15:6).
- நித்தியத்தை நோக்கி நகரும் போது, வாழ்க்கையில் ஏற்படும் உபத்திரபவங்களைச் சகிக்கமுடியும். ( .எபி 11:8-10).

**முக்கிய வசனம்**

ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது ( ரோமர்4:3; ஆதி. 15:6).

## 6. லோத்து

**முக்கிய குறிப்புகள்**.

ஆபிரகாமின் மருமகன், சோதோமின் அழிவின் போது தப்பி ஓடினார். (12:4-5; 19:1-29)

தகப்பன்; காரான் (11:27)

**ஆண்பிள்ளைகள் ;** மாவோப்,பென்-அம்மி (19:36-38)

**பெண்பிள்ளைகள் ;** பெயர் குறிப்பிடாதோர். (19:14, 31-38).

**தொழில் :** மேய்ப்பன், நில உரிமையாளன், நகர உத்தியோகத்தர். (13:5; 19:1)

அவரது வாழ்வின் முக்கிய நிகழ்வுகள்.

- ஆபிரகாமுடன் கானானுக்குச் சென்றார். (11:31–12:5)
- சோதோமுக்கு அருகில் நல்ல நிலத்தைத் தெரிவு செய்தார். (13:7-12)
- சிறைப்பட்ட நிலையிலிருந்து ஆபிரகாமினால் மீட்க்பட்டார். (14:1-16)

- சோதோமிலிருந்து மீட்கப்பட்டார். (19:1-29)
- முறையற்ற புணர்ச்சியில் ஈடுபட்டார். (19:30-38)

**முக்கிய வேதாகம மேற்கோள்கள்**. : 11–14; 19; லூக்17:28-29, 32; 2 பேது. 2:7-8

**லோத்திடமிருந்து கற்றுக் கொள்ளக் கூடிய ஆவிக்குரிய பாடங்கள்**

- சோதோமுக்கு அருகில் உன்னுடைய கூடாரத் ஒருபோதும் அமைக்காதே(13:12-13). அதாவது கர்த்தர் இல்லாதவர்களின் நட்பை நாடாதே( சங். 1).
- சோதோமிலிருந்து விடுதலையாக்கப்பட்ட பின்பு மீண்டும் அதை நாடாதே (14:16)

**முக்கிய வசனம்**

யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக்கண்டான். ......அது கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும் எகிப்து தேசத்தைப்போலவும் இருந்தது. ......அப்பொழுது லோத்து யோர்தானுக்கு அருகான சமபூமி முழுவதையும் தெரிந்துகொண்டான......லோத்து அந்த யோர்தானுக்கு அருகான சமபூமியிலுள்ள பட்டணங்களில் வாசம்பண்ணி, சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான். (13:10-12).

## 7. சாரா

முக்கிய குறிப்புகள்.

ஆபிரகாமின் மனைவி, ஈசாக்கின் தாயார். (11:29; 17:19)

**பிறந்த இடம்.:** கல்தேயரின் ஊர். (11:31)

**தகப்பன்**. :தேராகு (; 20:12)

**சகோதரன்** : ஒன்றுவிட்ட சகோதரனாகிய ஆபிரகாம். (20:12)

**மகன்:** ஈசாக்கு (21:1-7)

**மரணமடையும் போது வயது.:** 127 (23:1-2)

**முக்கிய மேற்கொள்கள் :** 11–25; ஏசாயா 51:1-2;ரோம. 4:19; 9:9; கலாத் 4:21-31; எபிரே. 11:11; 1 .பேது 3:4-6

**சாராவிடமிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய ஆவிக்குரிய பாடங்கள்**.

- எங்கள் சொந்த முயற்சியால் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்ற முடியாது.(16:1-6).
- எல்லாம் அறிந்தவரும், எங்களைக் காண்கிறருமான ,எங்களைப் பார்க்கிறவும், எங்கள் சத்தத்தைக் கேட்கிறவருமான கர்த்தரிடத்தில் பொய்சொல்வது பயனற்றது. (18:9-15).
- அமைதலுள்ள ஆவி கர்த்தருடைய பார்வையில் விலையேறப் பெற்றது. (1 பேது 3:4-6).

**முக்கிய வார்த்தை**.

ஆபிரகாம் முதிர்வயதாயிருக்கையில், சாராள் கர்ப்பவதியாகி, தேவன் குறித்திருந்த காலத்திலே அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள். (21:2, ).

# 8. ஈசாக்கு

**முக்கிய குறிப்புகள்.**

ஆபிரகாமின் வாக்குப்பண்ணப்பட்ட மகன், யாக்கோபின் தகப்பன். (17:19; 25:21-26)

**பிறப்பு:** 21:1-7 இல் பதியப்பட்டுள்ளது.

**தாய்.:** சாராள் (21:2-3)

**சகோதரர்கள்.:** (ஒன்றுவிட்ட சகோதரர்கள்.) இஸ்மவேல்,சிம்ரான், யக்ஷான், மேதான், மீதியான், இஸ்பாக், சூவா (16:15; 25:1-2)

**மனைவி:** ரெபேக்கா (24:6)

**ஆண்பிள்ளைகள் ;** ஏசா, யாக்கோபு (25:24-26)

**தொழில் ::**நிலச் சொந்தக்காரர். (25:5)

**அவருடைய வாழ்க்கையின் முக்கிய சம்பவங்கள். :**

மோரியா பலிபீடம் (22:1-14)

ரெபேக்காளுடன் திருமணம். (24:1-67)

யாக்கோபு, ஏசா பிறப்பு (25:19-26)

ஏசாவின் ஆசீர்வாதம் யாக்கோபுவுக்கு கொடுத்தல். (27:1-40)

**மரணமடையும் போது வயது.::** 180 (35:27-29)

**முக்கிய வேதாகம மேற்கோள்கள் :** 17:5–35:29; யாத்தி 2:24; 2 ராஜா 13:23; லூக் 3:34; ரோம 9:7-8; கலாத் 4:28; எபி11:17-20

**ஈசாக்கிடமிருந்து கற்றுக் கொள்ளக்கூடி ஆவிக்குரிய பாடங்கள்.**
கீழ்ப்படிந்து நடத்தல் ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும். (22:9-18).

• எங்கள் தீர்மானங்களை நாங்களேசெயற்படுத்துவதைப் பார்க்கிலும், கர்த்தருக்குள் இருக்கும் பெற்றோரிடத்தில் அல்லது கர்த்தருக்குப் பயந்து வாழ்பவர்களிடத்தில் சமர்ப்பிப்பது மிகவும் ஞானமான செயற்பாடாகும். (24:1-4, 67).

• எங்கள் குடும்பத்திலுள்ள துணைக்கும் மற்றும் முக்கியமான நபர்களுக்கும் விசுவாசத்துடன் கர்த்தரிடத்தில் ஜெபம்செய்தல் வேண்டும். (24:63; 25:21; 26:25).

• பிள்ளைகள் பாவத்தையும், தவறுகளையும் பெற்றோரிடமிருந்து கற்றுக் கொள்கின்றார்கள். (12:13; 20:2; 26:6-7; எண். 14:18).

• பிள்ளைகள் மத்தியில் பெற்றோர் காண்பிக்கும் வித்தியாசமான அன்பு குடும்பத்தில் பிளவுகளை உருவாக்கும். (27:1-38).

**முக்கிய வார்த்தை**.

அப்பொழுது அவர்: உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார். (22:2).

## 9.ரெபேக்காள்.

### முக்கிய குறிப்புகள்.

ஈசாக்கின் மனைவி., யாக்கோபின் தாயார். (24:67; 25:26)

தகப்பன்: பெத்துவேல்.(22:23)

சகோதரன்: லாபான் (24:29)

பிள்ளைகள்.: ஏசா, யாக்கோபு (25:21-26)

முக்கிய மேற்கோள். : 24–27;ரோம 9:10

**ரெபேக்காவிடமிருந்து கற்றுக் கொள்ளக் கிய ஆவிக்குரிய பாடங்கள்**

• அன்பானது முழுவாழ்க்கையையும் மாற்றிப் போடும். (24:10-67).

• கர்த்தருடைய நோக்கத்தை தெளிவாக அறிந்தபின்பு, அதைச் செயற் படுத்துவதற்கு விரைந்து செயற்பட வேண்டும். (24:57-58).

• குடும்பத்திலாகிலும், வேறு இடங்களிலாகிலும் பட்சபாதம் காட்டுதல், பிரச்சனைகளைக் கொண்டு வரும். (27:1-42).

**முக்கிய வார்த்தை**.

ரெபெக்காளை அழைத்து: நீ இந்த மனிதனோடேகூடப் போகிறாயா என்று கேட்டார்கள். அவள்: போகிறேன் என்றாள். (24:58).

## 10. யாக்கோபு (இஸ்ரவேல் )

### முக்கிய குறிப்புகள்.

அவருடைய 12 பிள்ளைகளும் இஸரவேலர்களின் 12 கோத்திரங்களை உருவாக்கினார்கள். (29:31–30:24; 1.நாளா 2–8)

**பிறப்பு** : 25:22-26இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**தகப்பன்**. : ஈசாக்கு (25:21-26)

**தாய்**. : ரெபேக்கா (25:21-26)

**சகோதரன்** : ஏசா (25:25)

**மனைவிமார்கள்**.: லேகா, ராகேல், பில்லா, சில்பா (29:23, 28; 30:4, 9)

**ஆண்மக்கள்.: லேகா பெற்றது** : றூபன்,சிமியோன்,லேவி, யூதா, இசக்கார்,செபுலோன் (29:32-35; 30:18-20); **ராகேல் பெற்றது** : யோசேப்பு,பென்ஜமின் (30:22-24; 35:16-18); **பில்லா பெற்றது:** தான், நப்தலி,, (30:5-8); **சில்பா பெற்றது**.: காத்,.(Gad), ஆசேர் (30:10-13).

பெண்பிள்ளை : தீனா (30:21)

தொழில் : மேய்ப்பன், , கால்நடை வளர்ப்பவர் (29–31; 37:2)

**வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகள்**.

- ஏசாவின் பிறப்புரிமையை வாங்கிக் கொள்ளல்.(25:27-34)
- ஏசாவின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளல். (27:1-29)
- பெத்தேலில் தரிசனம் காணல். (28:10-22)
- திருமணம் முடித்தல், குடும்பத்தைத் தொடங்குதல். (29:1–30:24)
- கர்த்தருடன் போராடல்; புதுப் பெயரைப் பெற்றுக் கொள்ளல். (32:24-32)
- மகன் யோசேப்பு எகிப்தில் விற்கப்படல். (37:1-36)
- அவருடைய குடும்பம் எகிப்பிற்கு குடியேறுதல். (46:1–47:12
- தன்னுடைய மகனை ஆசீர்வதித்தல். (48:1–49:28)

மரணமடையும் போது வயது. : 147 (47:28)

முக்கிய வேதாகம மேற் கோள்கள். : 25–37; 42; 45–50; யாத். 2:24; 2 ராஜா 13:23; ஓசியா 12:2-5; மத். 22:32; லூக்3:34; அப் 3:13; 7:8-16; எபிரே 11:9, 20-21

**யாக்கோப்பிடமிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய ஆவிக்குரிய பாடங்கள்**

- தவறான வழியிலும் சரியான குறிக்கோளை அடைய முடியும் (25:23; ரோம.9: 10-13) (25:29-34; 27:1-29).
- கர்த்தரிடம் செய்யும் வாக்குறுதிகளுக்கு நாம் எந்த நிபந்தனைகளையும் முன்வைக்கக் கூடாது. (28:20-22).
- எங்களுக்கு அற்பமாக இருப்பவர்களுக்கும்,மற்றும் யாவருக்கும் எங்கள் உரிய மரியாதை கொடுக்க வேண்டும், (29:30-32).
- பிரச்சனைகள் எங்கள் வாழ்க்கையில் எற்படும் காலங்களில் கர்த்தர்மீது நம்பிக்கைவைப்பதற்கு நாம் பயப்படவே கூடாது. (32:13-20; 33:1-4).

- ஆவிக்குரிய யுத்தம் முடில் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைத் தரும். (32:24-31).
- நாங்கள் விடும் ஆவிக்குரிய தவறுகள்,எங்கள் பிள்ளைகளின் வாழ்க்கைகளிலும், மற்றும் நம்மைச் சார்ந்திருப் போர் வாழ்விலும் பாதிப்புக்களை ஏற்படுத்தும். (27:1-29 , 34:1-29; 35:22; 37:31-35; 38:12-23). யாருக்கு நாம் எதை விதைக்கிறோமோ அதையே நாம் அறுப்போம்.

**முக்கிய வசனம்.**

நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார். (28:15).

## 11.ராகேல்.

### முக்கிய குறிப்புகள்.

யாக்கோப்பினால் நேசிக்கப்பட்ட மனைவி, யோசேப்புடையதும்,பென்ஜமினதும் தாயார். (29:30; 30:22-24; 35:17-18)

தகப்பன் : லாபான் (29:16)

சகோதரி : லேயாள் (29:16)

மரணம்: 35:16-20 இல் பதியப்பட்டுள்ளது.

வேதாகம மேற்கோள். : 29:6–35:20; ரூத் 4:11; எரே.31:15; மத் 2:18

**ராகேலிடமிருந்து கற்றுக் கொள்ளக் கூடிய ஆவிக்குரிய பாடங்கள்**

- எங்கள் தேவைகளைச் சந்திப்பதற்கு கர்த்தரை நம்பிக் கொண்டுராமல் மற்ற ஜனத்தாரிடமோ (30:1-4), அல்லது விக்கிரகத்திடமோ சேருவது மிக இலகுவாகும் (30:14; 31:34)
- பொறாமையும் எரிச்சலும் நல்ல மனிதர்களின் உறவைப் பாதிக்கும். (30:1-5).

**முக்கிய வசனம்.**

அந்தப்படியே யாக்கோபு ராகேலுக்காக ஏழு வருஷம் வேலை செய்தான்; அவள் பேரில் இருந்த பிரியத்தினாலே அந்த வருஷங்கள் அவனுக்குக் கொஞ்சநாளாகத் தோன்றினது. (29:20).

## 12.ஏசா

### முக்கிய விடயங்கள்

ஏசா, யாக்கோபின் சகோதரனும், ஈதோமியரின் தகப்பனுமாவார்.(25:26; 36:43)

பிறப்பு : 25:22-28 இல் பதியப்பட்டுள்ளது.

தகப்பன்.: ஈசாக்கு (25:21-25)

தாய்.: ரெபெக்கா (25:21-25)

சகோதரன் :யாக்கோபு (25:26)

மனைவிமார்கள் : யூடித், பஸ்மாத்தையும் , மகலாத் (26:34; 28:8-9; 36:1-3)

ஆண்மக்கள். : எலிப்பாஸ், ரெகுவேல், எயூஷ், யாலாம், கோராகு (36:4-5; 1 நாளா 1:35)

தொழில் : மேய்ப்பன், வேட்டைக்காரன். (25:27)

**வாழ்க்கையில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள்.:**

- பிறப்பு உரிமையை விற்றுப் போட்டார். (25:27-34)
- தகப்பனாருடைய ஆசீர்வாத்த்தை இழந்து போதல். (27)

. முக்கிய வேதாகம மேற் கோள்கள். : 25–28; 32–36; மல்கி 1:2-3; ரோ 9:13; எபி12:15-17

**ஏசாவிடமிருந்து கற்றுக் கொள்ளக் கூடிய ஆவிக்குரிய பாடங்கள்**

- உலக பொக்கிஷங்களுக்காக, ஆவிக்குரிய பொக்கிஷங்களை விலைபேசக்கூடாது. அவற்றை தவறவிடுவோமானால், மீண்டும் பெற்றுக் கொள்வது அரிதாகும். ( 25:29-34; எபி.12:16-17).
- கர்த்தருடைய ஆசீர்வாதங்களைத் தவறவிடுவோமாகவிருந்தால், அவற்றை மீண்டும் பெற்றுக் கொள்வது அரிதாகும். (27:34-38; எபிரே 12:17).
- பிள்ளைகளின் ஞானமற்ற செயற்பாடுகள், பெற்றோருக்கு துக்கத்தைக் கொண்டுவரும். (26:34-35).
- கர்த்தரை அறியாத ஜனங்கள் சில வேளைகளில், விசுவாசிகளைவிட மற்றவர்களை மன்னிக்கின்றார்கள். (33:4).

**முக்கிய வசனம.**

ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும் யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும், ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத் திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப்போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையா யிருங்கள். ஏனென்றால், பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப் பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணீர்விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற்போனான். ” (எபி 12:15-17).

## 13. யோசேப்பு

**முக்கிய விடயங்கள்**

யாக்கோபுவின் விருப்பமான மகன் யோசேப்பு , எகிப்திலிள்ள தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தன்னுடைய குடும்பத்தை பஞ்சத்திலிருந்து காப்பாற்றினார். (37:3; 45:7-11)

பிறப்பு: 30:22-24 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தகப்பன். : யாக்கோபு (30:25)

தாய்.:ராகேல் (30:22-24)

சகோதரர்கள்: பென்ஜமின்(35:24). ஒன்று விட்ட சகோதரர்கள்: றூபன், சிமியோன்,லேவி, யூதா, இசக்கார்,செபுலோன், தான், நப்தலி, காத், ஆசேர் (35:23-26)

சகோதரிகள். : ஒன்றுவிட்ட சகோதரி தீனாள். (30:21)

மனைவி : ஆசனேத். (41:45)

பிள்ளைகள் : மனாசே, இப்பிரகாமிம் (41:51-52)

தொழில்: எகிப்தின் முதல்மந்திரி (41:37-41)

**வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகள்.**

- அவரது கனவுகள் (37:5-10)
- எரிச்சலுள்ள சகோதரர்களால் விற்கப்படல்.(37:12-28)
- எகிப்தில் சிறைவைக்கப்படல். (39–40)
- பார்வோனின் கனவிற்கு அர்த்தம் கூறுதல் (41:1-36)
- பிரதம மந்திரி பதவி வகித்தல். (41:37-57)
- சகோதரர்களின் குற்றத்தை மன்னித்து அவர்களுக்கு உதவிசெய்தல். (42–45)
- தன்னுடைய குடும்பத்தினரை எகிப்தில் குடியமர்த்தல். (46:1–47:12)

மரணமடைந்த வயது.: 110 (50:22-26)

முக்கிய வேதாகம மேற் கோள்கள். : 37–50; சங் 105:16-22; அப் 7:9-14; எபி.11:22

**யோசேப்பிடமிருந்து கற்றுக் கொள்ளக் கூடிய ஆவிக்குரிய பாடங்கள்**

- எங்கள் வாழ்க்கையில் ஏற்படும் சூழ்நிலைகள் யாவும், எங்கள் வாழ்க்கையின் முக்கியமானவையாகும், அவற்றை அவதானமாக்கையாளல் வேண்டும். (39).

- கர்த்தரிடமிருந்து கற்றுக் கொண்டவற்றை, மற்றவர்களுக்கு உணர்வு பூர்வமாகவும் அவதானமாகவும் வெளிப்படுத்தல் வேண்டும். (37:5-11).

- எங்களைப்பற்றி அறியாத வெளி இடங்களிலும், பாவம் செய்வது தவறானதாகும். (39:7-9).

- கரத்தருடன் வாழ்பவர்கள் துன்பங்களையும் அனுபவிக்க வேண்டும் (39:10-20; 2 திமோ 3:12).

- கர்த்தரைக் கனப்படுத்துபவர்களை ஏற்ற காலத்தில் கர்த்தர் உயர்த்திக் கௌரவிப்பார். (41:38-44; யாக் 4:10; 1 பேது. 5:5-6).

• மனிதர்களின் பாவச் செயற்பாடுகளை கர்த்தர் தன்னுடைய மகிமைக்காகப் பயன்படுத்துவார். (50:20; சங்கீ 76:10).

**முக்கிய வசனம்**.

அப்பொழுது பார்வோன் தன் ஊழியக்காரரை நோக்கி: தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப்போல வேறொருவன் உண்டோ என்றான். (41:38).

**ஆதியாகமம்**.

| படைப்பின் வாரம் | | |
|---|---|---|
| **நாள்** | **செயற்பாடு** | **குறிப்பு** |
| 1 | நிலம்,வெளிச்சம், படைப்பு,தூதர்கள். | படைக்கப்பட்ட உலகம் சக்தியடைகின்றது பூமி தனக்குரிய அச்சில் சுழற்சியடைகின்றது இழுவிசை காந்தச் சக்தியும்,அணுச்சக்தியும் செயற்பாட்டில் தற்போதுள்ளது |
| 2 | பிரிவு ஜலத்தின்மத்தியில்ஆகாயவிரிவுஉண்டாக்கப்பட்டு , அதுஜலத்தினின்றுஜலத்தைப்பிரித்தது. | தற்போது ஆகாயவிரிவின் மேற்பகுதியில் அதிகம் நீராவி காணப்படுகின்றது. வெள்ளத்திற்கு முன்பு இவ்வாறான நிலைதான் காணப்பட்டிருக்கும், இது வெள்ளம் ஏற்பட்டதை விளக்குகின்றது |
| 3 | தாவரங்களின் படைப்பு | இது இறையியல் தத்துவத்தைச் சிறப்பாக விளக்குகின்றது. டார்வின், உயிரினங்கள் பழைய சமுத்திரத்தில் ஆரம்பமானது என்று கூறினார். வறண்ட நிலத்தில் தாவர உயிரினங்கள் ஆரம்பமானது என்று மோசே கூறுகின்றார். |
| 4 | சூரிய சந்திர நட்சத்திரங்களின் படைப்பு | சூரியனுக்கு முன்பாக ஏன் புமி |

| | | |
|---|---|---|
| | | உருவாக்கப்பட்டது?<br>. கர்த்தரின் முன்னுரிமையைக காண்பிக்கின்றது. சூரிய வணக்கத்தைத் தடுப்பதற்காகவும்செய்யப்பட்டிருக்கலாம். |
| 5 | மீனும் பறவைகளும் உருவாக்கப்படல். | .மிகச்சிறிய பறவைகளையும் உருவாக்கினார். அதுமட்டுமல்ல பெரிய திமிங்கிலங்களையும் உருவாக்கினார். |
| 6 | மனிதனையும் மிருகத்தையும் உருவாக்குதல். | பூமியில் காணப்படும் நாய் முதற்கொண்டு டைனோசர் வரை உருவாக்கப்பட்து. |
| 7 | படைப்பு நிறைவுபெற்றது. கர்த்தர் இளைப்பாறினார். | 7ம் நாள் படைப்பின் முடிவின் ஞாபகமாக வுருவானது. இது இளைப்பாறுதலின் நாளானது. |

**நியாயத்தீர்ப்பு**

மனிதன்மீது வருத்தும் துன்பமும்

| |
|---|
| பெண்மீது- வேதனையோடேபிள்ளைபெறுவாய்; உன்ஆசைஉன்புருஷனைப்பற்றியிருக்கும் |
| **இயற்கைமீது**;- பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும் ,அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; |
| **பாம்பின்மீது;- நீ உன்வயிற்றினால் நகர்ந்துதிரிவாய்**. |
| சாத்தான்மீது;- **அவர்உன்தலையைநசுக்குவார்.** |

**நான்கு விதமான கர்த்தரின் கிருபை**

| |
|---|
| **ஆதாமை வெளியே சந்தித்தார்**. |
| **ஆதாமுக்கு ஒரு இரட்சகர் வாக்களிக்கப்பட்டார்**. |
| **ஆதாமை அவர் உடுத்துவித்தார்**. |
| **தோட்டத்திலிருந்து ஆதாமை கர்த்தர் அகற்றி விட்டார்.** |
| |

**பாவத்தின் கொடூரம்**

| **முதலாம் ஆதாமினால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சனைகள்** | **இரண்டாம்ஆதாமினால் (இயேசு) ஏற்படுத்தப்பட்ட தீர்வுகள்.** |
|---|---|

| | |
|---|---|
| **ஆதி**.2:17 **அவரால் ஏற்படுத்தப்பட்ட மரணம்**....<br>ஆதி 2:17 ஆனாலும் நன்மை தீமை அறியத் தக்கவிருட்சத்தின்கனியைப்புசிக்கவேண்டாம் ;<br>அதைநீபுசிக்கும்நாளில்சாகவேசா**வாய்என்று கட்டளையிட்டார்.** | **மரணம் எபிரேயர்**. **2:9 இரண்டாம்**<br>ஆதாம் **அனுபவித்த விடுதலைக்கான மரணம்**<br>எபி 2:9 என்றாலும், தேவனுடைய கிருபை யினால் ஒவ்வொரு வருக்காகவும், மரண த்தைருசி<br>பார்க்கும் படிக்கு தேவ தூதரிலும் சற்றுச் சிறியவராக் கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்த தினிமித்தம்மகிமையினாலும் கனத்தினாலும் முடி சூட்டப் பட்டதைக்காண் கிறோம். |
| **ஆதி**3:11**அவரால் ஏற்படுத்தப்பட்ட நிர்வாணம்**....<br>**Gen 3:11**அப்பொழுதுஅவர்:<br>நீநிர்வாணிஎன்றுஉனக்குஅறிவித்தவன்யார் | **யோவான் 19:23 அவர் நிர்வாணமாக்கப் பட்டார்**.<br>யோவா19:23போர்ச்சேவகர்இயேசுவைச்சிலுவை யில்அறைந்தபின்பு, அவருடைய வஸ்திரங்களைஎடுத்து, ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ் வொரு பங்காக நாலுபங்காக் கினார்கள்; அங்கியையும்எடுத்தார்கள்,<br>அந்தஅங்கி, தையலில்லாமல்மேலேதொடங்கி முழுவதும்நெய்யப்பட்டதாயிருந்தது |
| **ஆதி**.3:14 **அவர் சாபத்தை அறிமுகம் செய்தார்**.<br><br>ஆதி3:14 அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப்பார்த்து: நீஇதை ச்செய்த படியால் சகலநாட்டு மிருகங்களிலும் சகலகாட்டுமிருகங்களிலும்சபிக்கப்பட்டிருப் பாய், நீஉன்வயிற்றினால்நகர்ந்து, உயிரோ டிரு க்கும் நாளெல்லாம் மண்ணைத்தின் பாய்; | **கலாத் 3:13 அவர் சாபமானார்**<br><br>Gal 3:13 மரத்திலேதூக்கப்பட்டஎவனும் சபிக்கப்பட்டவன்என்றுஎழுதியிருக்கிறபடி, கிறிஸ்துநமக்காகச்சாபமாகி, நியாயப்பிரமாணத் தின்சாபத்திற்குநம்மை நீங்கலாக்கிமீட்டுக்கொண்டார் |
| **ஆதி 3:17 அவர் துக்கத்தை அறிமுகப்படுத்தினார்**<br><br>ஆதி 3:17 பின்புஅவர்ஆதாமைநோக்கி: நீஉன்மனைவியின்வார்த்தைக்குச்செவிகொ டுத்து, புசிக்க வேண்டாம் என்றுநான் உனக்குவிலக்கினவிருட்சத்தின்கனியைப்புசி த்தபடியினாலே, பூமி உன்நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீஉயிரோடிருக்கும் நாளெல்லாம்வருத்தத்தோடேஅதின்பலனை ப்புசிப்பாய். | **ஏசாயா** 53:3 **பாடுஅநுபவித்தவருமாயிருந்தார்**<br><br>ஏசா 53:3 அவர்அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால்புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம்நிறைந்தவரும்,பாடுஅநுபவித்தவருமாயி ருந்தார்; அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்; அவர் அசட்டைப ண்ணப்பட்டிருந்தார்; அவரைஎண்ணாமற் போனோம். |
| **ஆதி**. **3:18 அவரால் முள்ளும் குருக்கும் அறிமுகமானது**.<br><br>ஆதி 3:18 அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர் வகை களைப்புசிப்பாய். | **யோவான் 19:5 அவர் முள்முடி தரித்தார்**.<br><br>யோவான் 19:5 இயேசு, முள்முடியும்சிவப்பங்கியும்தரித்தவராய், வெளியேவந்தார். அப்பொழுது பிலாத்து அவர்களைநோக்கி: இதோ, இந்த மனுஷன் என்றான் |
| **ஆதி**. **3:19 அவரால் வியர்வை** | லூக்கா22:44 **அவர் வியர்வை சிந்தினார்**. |

| | |
|---|---|
| **அறிமுகப்படுத்தப்பட்டது**.<br><br>ஆதி3:19 நீபூமியிலிருந்து எடுக்கப்பட் டபடியால், நீபூமிக்குத்திரும்புமட்டும் உன்முகத்தின்வேர்வையால்ஆகாரம்புசிப்பா ய்; நீமண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத்திரும்புவாய்என்றார் | லூக் 22:44 அவர்மிகவும்வியாகுலப்பட்டு, அதிகஊக்கத்தோடேஜெபம் பண்ணினார். அவருடையவேர்வைஇரத்தத்தின்பெருந்துளிகளா ய்த்தரையிலேவிழுந்தது. |
| **ஆதி. 3:24 அவனுக்காக பட்டயம் அறிமுகப்ப டுத்தப்பட்டது**<br><br>ஆதி 3:24அவர்மனுஷனைத்துரத்திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப்போம்வழியைக்காவல் செய்யஏதேன்தோட்டத்துக்குக்கிழக்கேகேருபீ ன்களையும், வீசிக்கொண்டி ருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார். | **யோவான்.. 19:34 அவர்பட்டயத்தினால் குத்தப்பட்டார்**.<br>யோவான் 19:34 ஆகிலும் போர்ச் சேவகரில் ஒருவன்ஈட்டியினாலேஅவருடைய விலாவில்குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது |

**ஆரம்பத்தில் கர்த்தர் சகலவற்றையும் உருவாக்கினார்.**

**படைப்பு**
எல்லா பொருட்களினதும் ஆரம்பம் —ஆதி. 1–2

ஆறு நாள் படைப்பு

ஒரு நாள் ஓய்வு

**குழப்பம்/கெடுதி**
ஆதாமின் பாவம்— ஆதி. 3–5

ஆதாம் பாவம்செய்வதற்கான பிசாசின் வஞ்சனை.

கர்த்தரின்மீட்பு

ஆபேலின் இரத்த சாட்சி

ஏனோக்கின் ஊழியம்

**நியாயத்தீர்ப்பு**
நோவாகால வெள்ளம் — ஆதி 6–9

வெள்ளத்திற்கு முன்னய நிலை

வெள்ளத்திற்கூடான இரட்சிப்பு

வெள்ளத்தின்பின்பான நிலை.

**குழப்பம்**
பாபேல் கோபுரம்—ஆதி. 10–11

மனிதனின் ஆணவம்

கர்த்தரின் நியாயத்தீர்ப்பு

தேசங்களின் ஆரம்பம்

**IV. (ஆதி 10-11). சகலதின் குழப்பம்**

**A. மனிதனின் ஆணவம்.**

நிம்ரோத் என்னும் குழப்பவாதியிருந்தான். அவன் காமுடைய பேரப்பிள்ளையாவான். அவன் ஓர் உயர்ந்த கோபுரத்தையும் கட்டி அதனோடு நகரத்தையும் பாபிலோனுக்கு அருகிலுள்ள சமபூமியில் கட்டத் தொடங்கினான்.

**B. கர்த்தரின் நியாயத் தீர்ப்பு ;- கர்த்தர் இந்த கெட்ட நடவடிக்கையை தண்டிக்க நினைத்து மனிதர்களை சிறிய பாஷைக் குழுக்களாகப் பிரித்துவிட்டார். இதனால் ஒரே பாஷைக்காராகவிருந்த மனிதர்களைக் குழப்பிவிட்டார்.** (11:5-9).

C. தேசங்களின் ஆரம்பம்;-

நோவாவுடைய மூன்று பிள்ளைகளுக்கூடாக தேசங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

**(10:2-5).ஜெப்தாவின் பரம்பரையினர்**

| | |
|---|---|
| கோமர்- | ஜேர்மனி |
| மாகொக், | ரூபல்,மேசேக் (ருஷ்ஷியா) |
| மேதியா--- | பெசியா |
| ஜாவன்;- | கிரேக்கம் |
| ைறாஸ்--- | இத்தாலி |
| ரொக்கமா--- | ஆமீனியா |
| தாசீஸ்-- | ஸ்பெயின் |
| கிற்றிம்-- | சைபிறஸ் |

**2. காம் பரம்பரையினர்.(10:6-20).இவர்களின் சில பரம்பரையினர் கீழ்காணப்படும் இடங்களில் வாழ்கின்றனர்**.

| | |
|---|---|
| கூஸ் | எதியொப்பியா |
| மிஸ்றாயிம் | எகிப்து |
| பூட் | ஆபிரிக்கா |
| கானான் | பாலஸ்தினம் |
| நிம்றோட் | பாபிலோன் மற்றும் அசீறியா |

| | |
|---|---|
| சிடோன் | பொனென்சியா |
| கேத் | கைற்றிற்றி |
| ஜேபுஸ் | தாவிதின் காலத்திற்குமுன் ஜெரூசலேமில் வாழ்ந்தனர். |
| பிலிஸ்ரிம் | பெலஸ்தியர்கள். |
| சீன்– | யப்பான், இந்தியா |

### 3. சேம் பரம்பரையினர். (10:21-32; 11:10-32).

a. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு பரம்பரையினர்களுக்கூடாக வந்த இஸ்ரவேல் தேசத்தவர்கள்.

நன்றி கர்த்தாவே

திராணி.

உசாத்துணை நுல்கள்

**WILLMINGTON'S BIBLE HANDBOOK** *by* **Harold L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC. Wheaton, Illinois**

**WILLMINGTON'S GUIDE TO THE BIBLE** *by* **Dr. H. L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC. Wheaton, Illinois**

**PARSONS BIBLE PICTURES PARSONS TECHNOLOGY, INC. Cedar Rapids, Iowa**